விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 097 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 12 சனிக்கிழமை (26.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## நிபுணர்குழுவின் அறிக்கையின் பின்

# அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்தலாம்

## ஜனாதிபதி – கூட்டமைப்பு சந்திப்பில் இணக்கம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின் நிபுணர்குழுவின் அறிக்கை கிடைத்தபின்னர் அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்தலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### 13ஐ அமுல்படுத்தாவிட்டால்

## ஏன் பேச வேண்டும்

### கோட்டாவிடம் சம்பந்தன்

(கொழும்பு)

"13ஆவது திருத்தத்தை கூட முழுமையாக அமுல்படுத்த முடியாவிட்டால், நாங்கள் ஏன் பேச வேண்டும். நாம் எமது வழியில் தனிவழியில் செல்வோம்" என மேசையில் அடித்துக் கூறினார் இரா.சம்பந்தன். ▶15

## இராணுவம் காணி சுவீகரிக்கின்றதா?

### அவர்களுக்கு எதற்கு காணி ஆச்சரியத்துடன் கோட்டா கேள்வி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் காணியினை சுவீகரிக்கிறார்களா? அவர்களுக்கு எதற்கு காணி என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. ▶15

## நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுவோம்

### கூட்டமைப்பிடம் ஜனாதிபதி வலியுறுத்து



(கொழும்பு)

"நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுவோம்" என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அனைவரினதும் தலைவராக, அனைத்து மக்கள் மீதும் தாம் ஒருசேர அவதானத்தைச் செலுத்துவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் ▶15

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க ஜனாதிபதி இணக்கம்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார். ▶15



எதிர்வரும் நாட்களில் நாட்டில் 10 மணிநேர மின்வெட்டு

07 ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் அமோக ஆணையுடன் புதிய ஆட்சியமைத்தே தீருவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்



(கொழும்பு)

நாட்டு மக்களின் அமோக ஆணையுடன் புதிய ஆட்சியமைத்தே தீருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

"இந்த நாட்டு மக்கள் சரியான நேரத்தில் உரிய முடிவை எடுப்பார்கள். ▶15

## டீசல் இல்லை

### யாழ்.மாநகர அமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

டீசல் இயந்திரத்திற்கு போதிய அளவு டீசல் இல்லாத காரணத்தினால் யாழ்ப்பாண மாநகர சபையின் ▶15

## நாட்டை விற்றுவிடுவார்கள் என்று மக்களுக்கு சந்தேகம்

### அஸ்கிரிய மாநாயக்க தேரர்

(கொழும்பு)

நிலைமை இப்படியே சென்றால், நாட்டை விற்று விடுவார்கள் என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக அஸ்கிரிய மாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஆட்சியாளர்கள் அனைத்திற்கும் முன்னதாக நாடு மற்றும் மக்கள் குறித்தே சிந்திக்க வேண்டும். எதனை செய்ய வேண்டுமானாலும் எமக்கு ஒரு நாடு இருக்க வேண்டும். மக்களுக்கு ▶15

### எதிர்வரும் திங்கள்

## யாழ்.கலாசார மண்டபம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் கட்டிமுடிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசாரம் மண்டபம் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினத்தில் [illegible] ▶15

## ரணில் தலைமையில் சத்தியாக்கிரக போராட்டம்



▶15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

குருவே துணை

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

## மனவளக்கலை யோகப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் **அறிவுத் திருக்கோவில் அன்பர்களுக்கோர் இனிய செய்தி...!**

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்று பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான உலகப் பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய 'மனவளக்கலையை'

### இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்

- முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்ப்பம்
- அடுத்துவரும் அகத்தாய்வு 1... 2... 3... பயிற்சிகளுக்கும்

**அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெருமனம்கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்.**

எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- உடல்நலத்திற்கு → எளிய முறை உடற்பயிற்சி
- உயிர்வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியான பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம்:- **26.03.2022** (சனிக்கிழமை)
நேரம்:- மாலை **5.00** மணி தொடக்கம் இரவு **7.00** மணிவரை
பயிற்சியை வழங்குபவர்:-
துணைப் பேராசிரியர் **அருள்நிதி த.நந்தகுமரன்,**
துணைப் பேராசிரியர் **ந.ஜெயகிருஷ்ணா** மற்றும்
**அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி,**
**அருள்நிதி க.ஜெயராணி**

*வருக வருக! நலம் பெருக! பெறுக!*

**வாழ்க வையகம் ; வாழ்க வளமுடன்**

தொடர்புகளுக்கு:- **யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309**

(C-4060)

# பெற்றோல் ரூ.303

லங்கா ஐஓசி நிறுவனம் நள்ளிரவு முதல் பெற்றோல்களின் சில்லறை விலைகளை அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.

குறித்த விலை அதிகரிப்பு அனைத்து வகையான பெற்றோல்களுக்கும் லீற்றருக்கு 49 ரூபா என்ற அடிப்படையில் அதிகரிக்கப்படும் என்று குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

92 ஒக்டேன் லீட்டர் ரூபா 303.00 என்ற அடிப்படையிலும் 95 ஒக்டேன் லீட்டர் ரூபா 332.00 என்ற அடிப்படையிலும் விற்பனையாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## யாழ். மாவட்ட மாட்டு வண்டி சவாரி சங்க பொதுக்கூட்டம்

**காலம் : 26.03.2022 சனிக்கிழமை(இன்று) பி.ப 3 மணி**
**இடம் : புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குளத்தடி நாச்சிமார் கோவில் மண்டபம்.**

**அனைத்து பழைய சவாரி சங்க உறுப்பினர்கள், சவாரி பிரியர்கள் மற்றும் காளைச் சொந்தக்காரர்கள் அனைவரையும் அழைத்து நிற்கின்றார்கள் சவாரி சங்கத்தினர்.**

(10794)

## கண்ணீர் அஞ்சலி

பதிவாளர் நாயகம் திணைக்கள வடக்கு வலய அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **சங்கீதா விஜயேந்திரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் சதாசிவம் செல்வராசா



அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகமும் காணி மாவட்டப் பதிவகமும், யாழ்ப்பாணம்.**

(C-4061)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கதிர்காமு சந்திரலிங்கம்

தோற்றம் : 05.03.1952 மறைவு : 26.03.2005

வாழ்ந்த காலத்தில் அன்பை எமக்கு
அள்ளிவழங்கிய எம் அன்புத் தந்தையே!
உங்களை இழந்து பதினேழு ஆண்டுகள்
நாம் படும் துன்பம் சொல்லி மாளாதையா.
வாழ்வில் எமை வழிப்படுத்தி
வாழ்வை எமக்கு வளப்படுத்தி
இறையடி சேர்ந்தீரோ?
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி உருகுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(C-4062)

**மயூரன்ஸ் ஜுவல்லர்ஸ்**
இல. 95, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

**எஸ்.எஸ். மொபைல்ஸ்**
([illegible]லிங்கம் சறோஜினிதேவி)
இல. 65, சத்திரசந்தி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயறுறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் மீதான விரக்தியில் தலைவர் பிரபாகரனை தேடும் சிங்கள மக்கள்

## - வரலாற்று மாற்றம் குறித்து மனோ எம்.பி -



(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் தலைவரின் பெயரை உச்சரித்தால் தமிழர்கள் கைது செய்யப்பட்ட காலம் மாறி தற்போது தென்னிலங்கை சிங்கள மக்கள் அரசாங்கத்தின் மீதான விரக்தியில் விடுதலைப்புலிகளின் தலைவரின் பெயரை அதிகளவு உச்சரித்து வருகின்றனர். என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

இலங்கையின் நெருக்கடி நிலைமைக்கு பின்னரான மாற்றங்கள். குறித்து ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், வடக்கு,கிழக்கினை விடுதலைப் புலிகளின் தலைவருக்கு கொடுத்திருந்தால் செல்வம் நிறைந்த நாடாக மாறியிருக்கும், அவர்களிடமிருந்து கடனைப்பெற்று இலங்கையை மீட்டிருக்கலாம் என விடுதலைப்புலிகளின் தலைவரை தென்னிலங்கை மக்கள் தேடி வரும் காலம் வந்து விட்டது.

கடந்த மாதம் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் இலங்கையை விட்டு சென்ற காரணத்தினாலே பிரிட்டிஷ் காரர்கள் சுதந்திரமடைந்துள்ளனர். இலங்கைக்கு சுதந்திரம் தந்தது அவர்கள் அல்ல. எங்களை விட்டு சென்றமையினால் பிரிட்டிஷ்காரர்கள் சுதந்திரம் பெற்றார்கள் என்று சொல்லும் அளவுக்கு விரக்தியில் சிங்கள மக்கள் தெரிவித்த கருத்தும் அண்மையில் பிரபலமானது.

இந்த நிலையில், நெருக்கடி தான் வரலாற்றினை மாற்றும். இந்த மாற்றம் நல்ல மாற்றத்தினை அடைவதற்கான ஏற்பாடுகளில் நாம் அவதானமாக செயற்பட வேண்டும். இதற்கு உள்ளக சூழலும்,வெளிப்புறச்சூழலும் தகுந்தாற்போல அமைந்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# டீசல் கப்பலுக்கு டொலர் செலுத்தப்பட்டது

(கொழும்பு)

கடந்த 12 நாட்களாக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த டீசல் மற்றும் விமான எரிபொருள் கப்பலுக்கு 42 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர் ஒல்கா தெரிவித்துள்ளார்.

இதன்படி, 20,000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 20,000 மெட்ரிக் தொன் விமான எரிபொருளை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு கப்பலுக்கான தாமதக் கட்டணம் இதுவரை கணக்கிடப்படவில்லை.

மேலும், இந்திய கடனுதவியுடன் 35,000 மெட்ரிக் தொன் பெற்றோலை தாங்கிய மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தேவையான மசகு எண்ணெய் இன்மையால் மூடப்பட்டுள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உக்ரைன்- ரஷ்ய போர் விவகாரம்

## ஐ.நா போர் நிறுத்த வாக்கெடுப்பில் இலங்கை பங்கேற்கவில்லை

(ஜெனிவா)

உக்ரைன் மீதான ரஷ்யா தொடுத்துள்ள போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கட்டுப்பாடற்ற தீர்மானம் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்துக்கு ஆதரவாக 140 நாடுகளும், ரஷ்யாவுடன் இணைந்து பெலாரஸ், சிரியா, வட கொரியா மற்றும் எரித்ரியா முதலான 5 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன.

இலங்கை, இந்தியா, சீனா உள்ளிட்ட 38 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)

# யாழ்.போதனா மருத்துவமனையில் குருதிக்கு பாரிய தட்டுப்பாடு

## இரத்ததானம் வழங்குமாறு இரத்த வங்கி வேண்டுகோள்



(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் A+ குருதி வகைக்கும், O+ குருதி வகைக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா இரத்த வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நிலையில் மேற்படி குருதி வகைகள் இல்லாமையால் நோயாளர்களுக்கு குறித்த குருதி வகைகளை வழங்க முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும், எனவே, இதனைக் கருத்திற் கொண்டு இந்தக் குருதி வகைகளை உடையவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா இரத்தவங்கிக்கு நேரடியாகச் சமுகம் தந்து இரத்ததானம் செய்யுமாறும் இரத்த வங்கிப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

தினமும் காலை-8 மணி முதல் பிற்பகல்-4 மணி வரையான காலப்பகுதியில் யாழ். போதனா இரத்தவங்கிப் பிரிவிற்கு குருதிக் கொடையாளர்கள் வருகை தந்து இரத்ததானம் வழங்க முடியும் எனவும், குருதிக் கொடையாளர்கள் 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் இரத்த வங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (4-5-18)

# தபால் நிலைய சேவைகள் மட்டுப்படுத்தப்படும்

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி, மின்சார நெருக்கடி மற்றும் ஏனைய காரணங்களால் தபால் நிலையங்களின் பொதுச் சேவை நேரத்தை மட்டுப்படுத்த தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அனைத்து தபால் அலுவலகங்களிலும் சேவைகள் மாலை 5 மணியுடன் நிறைவடையும் என பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (நி-5)

# மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்கள்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி,

டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 294 ரூபாய் 99 சதமாகவும் கொள்முதல் பெறுமதி 317 ரூபாய் 30 சதமாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன், ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 376 ரூபாய் 95 சதம். விற்பனை பெறுமதி 391 ரூபாய் 25 சதமாகவும்,

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 328 ரூபாய் 50 சதம் விற்பனை பெறுமதி 321 ரூபாய் 51 சதமாகவும் ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபாய் 33 சதம் விற்பனை பெறுமதி 2 ரூபா 44 சதமாகவும் அதிகரித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேசிய அணி தெரிவு வவுனியாவில் இருந்து நான்கு வீராங்கனைகள்

கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய வலைப்பந்தாட்ட அணிக்கான தெரிவில் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 4 வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை வலைப்பந்தாட்ட அணிக்கு வீராங்கனைகளினை தெரிவு செய்யும் நோக்கில் ஒவ்வொரு மாகாணங்களிலும் வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு நாளை ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் தேசிய மட்ட தெரிவு இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் வவுனியா மாவட்டம் சார்பாக யங்ஸ்ரார் கழக வீராங்கனைகளான, வ/நெளுக்குளம் மகா வித்தியாலயத்தை சேர்ந்தவர்களான வி.துவாரகி, செ.மதுமிதா, வ/சிவப்பிரகாச வித்தியாலயத்தை சேர்ந்தவர்களான சே.ரூபிகா, தி.புவிகா ஆகியோர் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-90)


## பதவி வெற்றிடம்

### யாழ். எழில் இணைய வானொலி

யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரியால் ஆரம்பிக்கின்ற யாழ். எழில் இணைய வானொலிக்கு

- அறிவிப்பாளர்கள்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
- குரல் வழங்குனர்கள்

ஆகிய பணிகளுக்கான வெற்றிடம் உள்ளது. (C-4063)

- அறிவிப்புத்துறையில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- அறிவிப்பாளர்களாக இணைய விரும்புபவர்கள் முழுநேர அறிவிப்பாளர்களாக அல்லது பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் இணைந்து கொள்ளலாம்.

மாணவர்களும் பயிற்சியாளர்களாக இணைந்து கொள்ளலாம்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் அலுவலக நேரங்களில் எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 31.03.2022

**077 730 4545 / 021 222 4550**

இல. 15, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## ஜோர்ஜ் வெஸ்ரார் வெற்றிக்கிண்ணம்

# சிறந்த கழக அணித் தெரிவு யாழ். ஜொனியன்ஸ் முன்னிலை



ஜோர்ஜ் வெஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆண்டுகளாக நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு (RATING) நிகழ்வில் 01.01. 2022 இலிருந்து 28.02.2022 வரை 5 போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் 4 போட்டிகள் (2021 ஆம் ஆண்டிற்கான போட்டிகள்) 01 போட்டி வி.டி.ஜெயரட்ணசிங்க வெற்றிக் கிண்ண அரை இறுதிப் போட்டி 01 ம் நடைபெற்றுள்ளன. இந்த 05 போட் டிகளுக்கும் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.ஜொனியன்ஸ் அணி 03 போட்டிகளில் பங்குபற்றி மூன்றிலும் வெற்றி பெற்று 24.74 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்திலும், மூளாய் விக்டோறி அணி 2 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றியும், மறு போட்டியில் தோல்வியடைந்து 8.28 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும், AB அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அவற்றில் வெற்றி பெற்று 6.35 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும், ஓல்ட் கோல்ஸ் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அப்போட்டியில் தோல் வியடைந்து 3.14 புள்ளிகளை பெற்று 4 ஆம் இடத்திலும்,ஓல்கோல்ஸ் அணி 2020, 2021 ஆம் ஆண்டுகளில் 1 ஆம் இடத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

பற்றீசியன்ஸ் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அதில் தோல்வியடைந்து 2.34 புள்ளிகளை பெற்று 5 ஆம் இடத்திலும், விக்டோறி யன்ஸ் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அதில் தோல் வியடைந்து 2.17 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலுமுள்ளனர்.

ஒவ்வொரு மாத முடிவிலும் கழகங்கள் பெற்ற புள்ளிகள், அவர்களின் நிலை என்பன கழகங்களின் கவனத்துக்கு கொண்டுவரப்படும். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2543

### பவித்ரா

அண்ணே கடை தோசைக்கும் வீட்டு தோசைக்கும் என்னண்ணே வித்தியாசம்...



அடேய் விளக்கமாத்தால அடிச்சிட்டு ஊத்துனா அது கடை தோசை தோசையை ஊத்திட்டு விளக்கமாற எடுத்தா அது வீட்டு தோசை.!

### அகஷ்யன்

கடன் கொடுத்தவன் பைக் சத்தம் கேட்டதும் லொக்கு... லொக்கு ...ன்னு சத்தமா இருமினேன்...



கொரோனாவாக இருக்குமோன்னு பதறியடிச்சிடிக்கிட்டு ஓடிட்டான் பயபுள்ள...

### மேனுஷா

கல்யாணம் பண்ணா பொறுப்பு வந்துருமாம். சொல்றாங்க



இதை நான் ஸ்கூல் படிக்கும் போதே சொல்லியிருந்தா டக்குனு கல்யாணத்த பண்ணி பொறுப்பா இருந்து பெரிய ஆளாயிருப்பன்

### சிறிதர்

சந்தேகம்!



கொசுவுக்கு மட்டும் எல்லா குருப் ரத்தமும் ஒத்துக்குதே அது எப்படி?

### கௌசல்யா

கஷ்டப்பட்டு ஜன்னலாரத்துல சீட் பிடிச்சு ஒரு குட்டி தூக்கம் போடலாம்னு உட்காந்தா



Balance தரேன்னு சொல்லிட்டு போன கண்டக்டர நினைச்சு நினைச்சு தூக்கமே வரல

### சர்மிலன்

அனிலுக்கும் ஆமைக்கும் லெட்டர் போட்டா எதுக்கு முதலில் போய் சேரும்..



அனிலுக்குத்தான் ஏன்னா அதுக்குத்தான் பின்கோடு இருக்கே

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

**புதிய அனுமதிகள்**

**கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி - 2022/ 2023 (அணி I)**
**Master of Christian Studies**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து கிறிஸ்தவ சமயம் அல்லது இறையியல் சார்ந்த இளங்கலைமாணிப் பட்டம்

அல்லது

- சமய மற்றும் மெய்யியற் கற்கை அவையினால் பரிந்துரைக்கப்பட்டு உயர் பட்டப்படிப்புகள் பீட அவையின் ஊடாக பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகைமைகளும், அனுபவ அத்தாட்சிகளும் பரிசீலிக்கப்படும்.

**தெரிவு முறைமை** : திறன்காண் பரீட்சையும், நேர்முகத் தேர்வும்
கற்கைக் காலம் : ஒரு வருடம்
மொழி மூலம் : தமிழ் / ஆங்கிலம்
கற்கைநெறிக் கட்டணம் : 105,000/- (5000/- மீள அளிக்கப்படும்)
விண்ணப்பப் படிவக் கட்டணம் : 1,000/-
விண்ணப்ப முடிவுத்திகதி : 29.04.2022

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

1. மக்கள் வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் (19001263000 2348) எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப்படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.grad.jfn.ac.lk எனும் பல்கலைக்கழக வலைத்தள (website) வசதியூடாகவும் பெற்றுக் கொள்ளலாம். வலைத்தளம் மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு (19001263000 2348) செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 29.04.2022 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்** (சி-4059)

# முன்னணி இன்று யாழில் போராட்டம்

(குப்பிழான்)

பொருட்களின் விலையேற்றத்திற்கும், பொருளாதாரச் சீரழிவிற்கும் காரணமான அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக இடம்பெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்மக்கள் அனைவரையும் அணிதிரண்டு பங்கேற்று ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர். (4-5-18)

# உணவுப் பொதிகளின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிவாயு விலை உயர்வு மற்றும் மின்சார நெருக்கடி காரணமாக உணவுப் பொதிகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என சிற்றுண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். சந்தையில், முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளமையால், உணவுப் பொதியின் விலை மேலும் உயர்வடைந்துள்ளன.

தற்போது எரிவாயு கொள்கலனை 4000 மற்றும் 5000 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதன் காரணமாக உணவுப் பொதிகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

கோழி இறைச்சி உணவுப் பொதியின் விலை 300 ரூபாவாகவும், மீன் உணவுப் பொதியின் விலை 250 ரூபாவாகவும், முட்டை உணவுப் பொதியின் விலை 240 ரூபாவாகவும், மரக்கறி உணவுப் பொதியின் விலை 220 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் வடையும், தேநீரும் சிற்றுணவகங்களின் பிரதான விற்பனை பொருட்களாக மாறியுள்ளதுடன், பராட்டாவும் அதிகளவில் விற்பனையாகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## ஓராண்டு நினைவுதினம்



பிறப்பு- 22.07.1997 இறப்பு- 05.04.2021

### பகீரதன் கிரிசாந்தி

அகிலத்தில் ஒரு உயிரை
பிரசவிக்க கருவை நீ சுமந்தாய் - அது
அகிலத்தை நம் பிள்ளையை
காணுமுன்னே எம்மை விட்டு நீ பிரிந்தாய்
உனக்காய் இன்று
கண்ணீர் வடிக்கிறோம்
உந்தன் பிரிவால் இன்று நான் துடிக்கிறேன்.
இனி எங்கு காண்பேன் உன்னை
என் இதயத்தில் வாழ்வாய் அன்பே
மீண்டும் உன் வருகைக்காய்
காத்திருக்கிறேன் Kiri

(0670 .10469)

சங்கானை,
நிற்சாமம்.

பிரிவால் வாடும்
கணவன்-பகீரதன்
அப்பா-(செல்லமணி)
புனிதராசா

# இராசிபலன்

26.03.2022
பங்குனி 12, சனிக்கிழமை
நவமி முன்னிரவு 8.57 மணிவரை

பூராடம் பிற்பகல் 3.39 மணிவரை
சுபநேரம்- 3.15-4.45 மணிவரை
இராகுகாலம் -9.15-10.45 மணிவரை

சந்திராஷ்டமம்-
ரோகிணி,மிருகசீரிடம்

**வளவன்**

**மேஷம்**
நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

**ரிஷபம்**
வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை உருவாகும்.

**மிதுனம்**
நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்**
வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உற்சாகமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்**
அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சிறப்பான நாள்.

**கன்னி**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**
புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு**
சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மகரம்**
எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்**
அன்னிய தேசத் தொடர்புகள் எண்ணியபடி கைகூடும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ்கூடும் நாள்.

**மீனம்**
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

வாலிபம் இன்பத்தால் நிறையும்,வயோதிபம் கவலையால் நிரம்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் வீடு புகுந்து வாள் வெட்டுக்குழு அட்டகாசம்

(குருமன்காடு)

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது வாள்களுடன் சென்ற இளைஞர் குழு ஒன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார்தெரிவித்தனர்.

நேற்று பகல் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, வேப்பங்குளம், 7 ஆம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் கணவன் வேலைக்கும், பிள்ளைகள் பாடசாலைக்கும் சென்ற நிலையில் பெண் மட்டும் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தார்.

இதன்போது கார் ஒன்றில் வாள்களுடன் சென்ற இளைஞர் குழுவொன்று குறித்த வீட்டின் யன்னல், கதவு, கதிரைகள் மீது தாக்குதல் நடத்தியதுடன், பெண்ணையும் தாக்க முயற்சித்துள்ளனர். இதனையடுத்து அங்கிருந்து தப்பியோடிய பெண் அருகில் இருந்த கடைக்குள் நுழைந்துள்ளார். பின்தொடர்ந்து சென்ற இளைஞர் குழு, கணவன் எங்கே எனக் கேட்டு அச்சுறுத்தல் விடுத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற நெளுக்குளம் பொலிஸார் தாக்குதல் நடைபெற்ற இடத்தை பார்வையிட்டதுடன் தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (4-5-250)

# துவிச்சக்கரவண்டி திருடிய இளைஞன் கைது

(குப்பிழான்)

யாழ்.நகரப் பகுதியில் துவிச்சக்கர வண்டி திருடிய குற்றச்சாட்டில் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்.போதனா மருத்துவமனைக்கு முன்பாக சந்தேகத்திற்கு இடமான முறையில் துவிச்சக்கர வண்டி ஒன்றினைக் குறித்த இளைஞன் எடுத்துச் சென்ற போது அப்பகுதியில் கடமையிலிருந்த பொலிஸார் இளைஞனை இடைமறித்து விசாரணைகளை முன்னெடுத்த போது துவிச்சக்கர வண்டியினை இளைஞன் திருடிச் செல்வதை அறிந்து இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (4-5-18)

## சாவகச்சேரியில் விபத்து

# மயிரிழையில் உயிர் தப்பிய மாணவிகள்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பாதசாரிகள் கடவையால் வீதியைக் கடந்த மாணவிகள் சிலர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

மருத்துவமனைக்கு முன்பாக உள்ள பாதசாரிகள் கடவையால் சில மாணவிகள் வீதியைக் கடப்பதனை அவதானித்த கூலர் வாகனம் வாகனத்தை நிறுத்திய போது அதன் பின்னால் வேகமாக வந்த டிப்பர் வாகனம் கூலர் வாகனத்தை மோதித் தள்ளியுள்ளது.

இதன்போது மாணவிகள் கடவையை விரைவாக கடந்திருக்காவிட்டால் டிப்பர் மோதிய வேகத்தில் கூலர் வாகனம் மாணவிகளை மோதிக் காயப்படுத்தியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் தெய்வாதீனமாக உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் வாகனங்கள் இரண்டும் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-5-30)

# சிறுவர் பூங்கா காணியில் சமுர்த்தி வங்கி அமைக்க எதிர்ப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினர் சிறுவர் பூங்கா அமைக்கவென கொள்வனவு செய்துள்ள காணியில் ஒரு பகுதியை சாவகச்சேரி வலய சமுர்த்தி வங்கி அமைப்பதற்கு வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே பெரும்பாலான சபை உறுப்பினர்கள் நுணாவிலில் உள்ள சிறுவர் பூங்கா காணியை சமுர்த்தி வங்கி கட்டடம் அமைப்பதற்காக வழங்க எதிர்ப்புத் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டில் இருந்து இழுபறி நிலையில் காணப்படும் சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக் காணி விவகாரத்தை தீர்ப்பதற்காக அண்மையில் அரசாங்க அதிபர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

நுணாவில் பகுதியில் நகரசபை சிறுவர் பூங்கா அமைக்கவென கொள்வனவு செய்துள்ள 29பரப்புக் காணியில் முகப்புப் பக்கமாக 3பரப்பு காணியை சமுர்த்தி வங்கிக்கு வழங்குமாறு குறித்த குழு நகரசபையை வலியுறுத்தியிருந்தது.

குறித்த குழுவின் வேண்டுகோளின் பிரகாரம் குறித்த விவகாரம் சபை அமர்வில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே அமர்வில் கலந்து கொண்ட பெரும்பாலான உறுப்பினர்கள் சிறுவர் பூங்கா காணியை வழங்க எதிர்ப்பு காட்டினர். (4-5-30)

# விளையாட்டு விழா

(குப்பிழான்)

ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா-2022 இன்று சனிக்கிழமை பிற்பகல்-2 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் றோ.க.த பாடசாலை முன்றலில் இடம்பெறவுள்ளது.

ஏழாலை புனித இசிதோர் ஆலயப் பங்குத் தந்தை வணபிதா ஜே.எ.ஜெறாட் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விளையாட்டு விழாவில் வலி. தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் சி. லகிந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (4-5-18)

---

(யாழ்ப்பாணம்)

ஞானக் குழந்தை இல்லங்களின் வருடாந்த விளையாட்டு விழா 2022 இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் பாலர் கல்வி கழக தலைவர் கலாநிதி பா. காசிநாதன் தலைமையில் இடம்பெறும். (4-5)

# எரிவாயு சிலிண்டர் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்திற்கு முன்னால் உள்ள வீட்டில் நேற்று சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று திருடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வீட்டு உரிமையாளரிடம் வினவியபோது இரண்டாவது தடவையும் எரிவாயு சிலிண்டர் திருடப்பட்டதாகவும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றதை தொடர்ந்து தாம் எரிவாயு சிலிண்டரை வீட்டின் வெளியே பொருந்தியிருந்த நிலையிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவித்தார்.(4-5-33)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தம்புவத்தை ஞான வைரவர் ஆலய பொதுக்கூட்டம்எதிர்வரும் 02ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00மணிக்கு ஆலயமுன்றலில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் யாப்பு மறுசீரமைத்தல் மற்றும் நிர்வாகத் தெரிவு, ஆண்டுக் கணக்கு அறிக்கை வாசிப்பு என்பன நடைபெறவுள்ளமையால் ஆலய நிர்வாகத்தினர், தர்மகர்த்தா சபையினர், உபயகாரர்கள், ஆலயத்தின் சந்தாகாரர்கள், அடியவர்கள் அனைவரையும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-5-04)



வடக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களம், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் விதாதா வள நிலையம் ஆகியன இணைந்து நடாத்திய புதுவருடக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் கடந்த புதன்கிழமை வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்பாக பிரதேச செயலாளர் த. முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

# ஒரு பவுண் 170,000 ரூபாய்!

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தங்கத்தின் விலை நேற்று ஒரே நாளில் 9 ஆயிரம் ரூபாய் அதிகரித்து ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் என புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 56 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 500 ரூபாவாக காணப்பட்டது.

24 கரட் தூய தங்கம் இன்று பவுண் ஒன்று ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. ஒரு வாரமாக 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு பவுண் ஒரு லட்சத்து 61 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டது. (4-5-33)

# புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(குப்பிழான்)

ஜீவநதி பதிப்பகத்தின் ஏற்பாட்டில் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகக்கண்காட்சியும் விற்பனையும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 6 மணி வரை நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும்.

மேற்படி கண்காட்சி நிகழ்வில் 1000 இற்கும் மேற்பட்ட ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன் இருநாட்களிலும் எட்டு எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடும் இடம்பெறும். (4-5-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 மணித்தியாலங்கள் வரை மின்வெட்டு?

(கொழும்பு)

## நாட்டில் மின்வெட்டு நேரங்கள் நீடிக்கப்படக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு, மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் மற்றும் நீர் என்பன பற்றாக்குறையாக உள்ளமையின் காரணமாகவே இந்த நிலை ஏற்படக் கூடும் என கூறப்படுகின்றது.

இதற்கமைய தற்போது அமுல்படுத்தப்படும் ஆறரை மணித்தியால மின்வெட்டு எதிர்வரும் வாரத்தில் இருந்து 10 மணித்தியாலங்கள் வரை நீடிக்கப்படக்கூடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தேவையான மசகு எண்ணெய் இன்மையால் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஒரு பில்லியன் டொலர் கடன் உலக வங்கியிடம் பெற தீர்மானம்

(கொழும்பு)

உலக வங்கியிடம் இருந்து ஒரு பில்லியன் டொலர் கடன் உதவியை இலங்கை பெற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய இலங்கையின் கிராமப்புற அபிவிருத்தி, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு உலக வங்கியிடம் இந்த கடன் உதவியை இலங்கை நாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அடுத்த மாதம் அமெரிக்காவில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி நிதிகளை சந்திக்க உள்ளதாக வும் தகவல் வெளியாகியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உயர்தர செயன்முறைப் பரீட்சைகள் 29 ஆம் திகதி ஆரம்பம்

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளுக்கான (2021 ஆம் ஆண்டுக்கான) செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ.தர்மசேன தெரிவித்துள்ளார்.


தேசிய மற்றும் இந்திய நடனக் கலை, கிழக்கு, கர்நாடக மற்றும் மேற்கத்தேய சங்கீத பரீட்சைகளே குறித்த காலப்பகுதிகளில் இடம்பெறவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

செயன்முறை பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளதுடன் பரீட்சார்த்திகளிடம் அனுமதி அட்டை இல்லாதிருந்தால், பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்திற்குச் சென்று மாணவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தவிர ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின் 011-278 4208 என்ற இலக்கத்திற்கும் 1911 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கும் அழைத்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நடைமுறைப் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்குத் தயாராகும் மாணவர்கள் கொவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிக்குமாறும், சம்பந்தப்பட்ட மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வேறொரு திகதியை வழங்க முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# கொழும்பில் தீ விபத்து 21 வீடுகள் முற்றாக நாசம்



(கொழும்பு)

கொழும்பு - தொட்டலங்க - கஜிமாவத்தை குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 21 வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 12.30 அளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தீ விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என வும் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

# ஐரோப்பா செல்ல முற்பட்ட 16 இலங்கையர் ருமேனியாவில் கைது

(ருமேனியா)

ருமேனியாவில் இருந்து பாரவூர்தி ஒன்றில் ஐரோப்பிய நாடொன்றுக்கு தப்பி செல்ல முற்பட்ட 16 இலங்கை ஏதிலிகள் கைதாகியுள்ளனர்.

ருமேனியாவின் நட்லாக் 2 எல்லை பகுதியில் குறித்த பாரவூர்தி சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அதில் மறைந்திருந்த 16 இலங்கையர்கள் உட்பட 38 ஏதிலிகள் கைதாகினர்.

கைதுசெய்யப்பட்ட இலங்கையர்களுடைய ஆவணங்கள், அவர்களிடமிருந்து, மீட்கப்பட்டதாக ருமேனிய பொலிஸார் தெரிவித்துள்ளதோடு கைதுசெய்யப்பட்ட இலங்கையர்கள் 22 முதல் 51 வயதுக்கு இடைபட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இலங்கையில் எந்த பகுதியைச்சேர்ந்தவர்கள் என்ற விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை. (நி-5)


## வேலையாட்கள் உடன் தேவை

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் அமைந்திருக்கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தி நிலையத்தில் போத்தல் கள் அடைப்பதற்கும் மற்றும் கிளை நிலையங்களில் கள் விற்பனை செய்ய 21 வயதிற்கு மேற்பட்ட (ஆண்) வேலையாட்கள் தேவை. அத்துடன் வெற்றுப் போத்தல் (625ml) ஆனது கழுவிச் சுத்தம் செய்ய ஆண்/ பெண் வேலையாட்கள் தேவை. எனவே ஆர்வமுடையோர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தொலைபேசியில் அல்லது நேரில் சமூகம் கொடுத்து பதிவுகளை மேற்கொண்டு வேலை செய்ய முடியும். (சம்பளம் நேரில் பேசி தீர்த்துக் கொள்ளப்படும்) விண்ணப்ப முடிவுத் திகதி 30.03.2022

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
தலைவர்/செயலாளர்/பொதுமுகாமையாளர்,
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
தொ.பே- 021 224 0022, 021 224 0024
077 020 4378 , 074 124 6271



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா:33 ¼ சூரி 10 செவ் 11 இல்
உயரம் : 170 cm
தகைமை/தொழில்: பட்டதாரி operation manager
எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது அரசதொழில்
தொ.இ: B/12427

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: சூரி 11 செவ் 4 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்:ஆட்டோ மொபைல் Eng.
எதிர்பார்ப்பு:உள்நாடு வெளிநாடு உள்நாடு ஆயின் சிறிய உத்தியோகம்
தொ.இ: B/12429

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 1
கி.பா : சூரி 8 செவ் 9 இல் உயரம்:5'5"
தகைமை/தொழில்:படப்பிடிப்பாளர்
எதிர்பார்ப்பு :சாதாரண வேலை செய்யும் பெண்
தொ.இ: B/12432

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா:25 ½ சூரி 8 செவ் 9 இல் உயரம்: 6"
தகைமை/தொழில்: BBA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் உத்தியோகம்
தொ.இ: B/12433

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: சூரி 9 செவ் 7 உயரம்:5'1"
தகைமை/தொழில்:B.Sc Bank Canada
எதிர்பார்ப்பு: Canada விரும்பத்தக்கது பட்டதாரி
தொ.இ:G/9268

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: சூரி 7 செவ் 2 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: உயர்தரம்
எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர் வெளிநாடு மட்டும்
தொ.இ:G/9284

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4 கி.பா: 49 சூரி 3 செவ் 12 இல் உயரம் :5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு : படித்த ஆண்
தொ.இ:G/9287

பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம் :-அச்சுவினி
கி.பா: சூரி. செவ் 11 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L , NCAT கணனி இயக்குனர் மாகாண திணைக்களம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு (London, Canada, America, Australia)
தொ.இ:G/9288

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 04

# நாளைக்காக மட்டும் வாழ முடியுமா?



என்னை மிகவும் ஆழமாக சிந்திக்க வைத்த பதிவு. பெற்றோர்களே கொஞ்சமாவது சிந்தியுங்கள். உங்கள் பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதற்காக உங்கள் சொந்த வீடு உள்ள இடத்தில் இருந்து குடிபெயர்ந்து நல்ல பள்ளி அருகினில் வீடு வாடகை எடுத்து நீங்கள் சம்பாதிப்பதை எல்லாம் வீட்டு வாடகைக்கும் பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கும் தான் செலவு செய்கிறீர்கள்.

அந்தக் கல்வி வருங்காலத்தில் அவனை ஒரு பணம் சம்பாதிக்கும் கருவியாகத் தான் மாற்றுமே தவிர நல்ல மனிதனாக ஒருபோதும் மாற்றாது என்பதனை நினைவில் வைத்துக் கொண்டு கீழே உள்ளவற்றைப் படிக்கத் தொடங்கவும் சமீபத்தில் ஒரு மின்னஞ்சல் எழுத்தாளர் ஒருவருக்கு வந்தது. வழக்கம் போல வாசகர் எழுதியதல்ல. வாசகரின் தந்தை எழுதியது.

தன்னை அறிமுகம் செய்து கொண்டார் அவர். மத்திய அரசில் ஆரம்பநிலை அதிகாரியாக இருந்தவர். இரண்டாம்நிலை அதிகாரியாக ஓய்வு பெற்றார். இரு பிள்ளைகள். இருவருமே நன்றாகப் படித்து அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலுமாக வேலை பார்க்கிறார்கள்.

இவர் திருச்சியில் மனைவியுடன் வாழ்கிறார்.அவரது பிரச்சினை தனிமை தான்.

பிள்ளைகள் வெளிநாடுகளில் குடும்பத்துடன் வாழ்கிறார்கள். அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட ஊருக்கு வருவதில்லை என்பதே அவரது மனக்குறை. வந்தால் அதிகபட்சம் ஐந்து நாட்கள். உடனே கிளம்பி விடுகிறார்கள். அந்த ஐந்து நாட்களிலும் மொத்தமாக ஐந்துமணி நேரம் பெற்றோரிடம் செலவழித்தால் அதிகம்

'உங்கள் நூல்களை இங்கே வரும் போது என் இரண்டாவது மகன் கட்டுக்கட்டாக வாங்கிச் செல்கிறான். நீங்கள் ஏன் இதை அவனிடம் பேசக்கூடாது? நீங்கள் பேசினால் அவன் கேட்பான்' என்றார் தந்தை.

இம்மாதிரி குடும்ப விடயங்களில் தலையிடக்கூடாதென்பது என் கொள்கை. ஆனால் அவர் மீண்டும் ஒரு மின்னஞ்சல் அனுப்பிய போது அதை அவரது மகனுக்கு அப்படியே திருப்பிவிட்டேன். அவர் மகன் ஒரு வாரம் கழித்து மிக நீளமான ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார். என்னைப் பல கோணங்களில் சிந்திக்க வைத்த கடிதம் அது.

'நான் திருச்சியில் இருபத்திரண்டு வருடம் வாழ்ந்திருக்கிறேன். ஆனால் திருச்சியுடன் எனக்கு மானசீகமாக எந்த உறவும் இல்லை. இருபத்திரண்டு வருடம் அப்பா அம்மாவுடன் வாழ்ந்தேன். ஆனால் அவர்களைப் பற்றி ஒரு நல்ல நினைவு கூட இல்லை' என்றார் அவரது மகன்.

அவரது தந்தை அவரை ஒரு பொறியியலாளராக ஆக்க வேண்டும் என்பதைப் பற்றி மட்டும் தான் சிந்தனை செய்தார். அதுவும் அவர் எல்.கே.ஜியில் சேர்வதற்கு முன்னதாகவே. ஒவ்வொருநாளும் அவரே காலையிலும் மாலையிலும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். அதைத்தவிர அவர்களின் அன்னையும் பாடம் சொல்லிக் கொடுப்பதுண்டு.

பள்ளிக்கூடப்படிப்பு. வீட்டில் படிப்பு தவிர இளமை நினைவுகள் என்று எதுவுமே இல்லை. ஞாயிற்றுக்கிழமைகள். விடுமுறைநாட்களில் முழுக்க முழுக்க பாடங்கள் தான். கோடைவிடுமுறை முழுக்க ஆங்கில மொழியறிவுக்கும் கணிதத் திறமைக்கும் வகுப்புகள். தீபாவளி, பொங்கல் தினங்களில் கூட கொண்டாட்டம் இல்லை. படிப்பு படிப்பு படிப்பு தான்"வீட்டைவிட மோசம் என் பள்ளி 'தனியார் பள்ளி அது.

மிக உயர்மதிப்பெண்கள் பெற்றுத் தரும் செலவேறிய பள்ளி.

அங்கே பிள்ளைகளைச் சேர்க்க வரிசையில் நிற்பார்கள்.பள்ளிக்கு உள்ளே நுழைந்த கணம் முதல் வெளியே செல்லும் கணம் வரை கூடவே ஆசிரியர்கள் இருப்பார்கள்.

பேசவோ சிரிக்கவோ விளையாடவோ அனுமதி இல்லை. படிப்பு மட்டும் தான்' அந்தப் படிப்பிலும் எந்த சுவாரசியமும் இல்லை. 'பள்ளிப்படிப்புக்கு வெளியே நான் எதையுமே வாசித்ததில்லை. யாருமே எனக்கு இலக்கியத்தையோ கலைகளையோ அறிமுகம் செய்ததில்லை. நானறிந்த படிப்பு என்பது புத்தகத்தில் உள்ளதை அச்சு அசலாகத் திருப்பி எழுதுவதற்கான பயிற்சி மட்டும் தான்" என்றும்

அப்படியே பொறியியல் படித்து வேலைக்காக அமெரிக்கா சென்ற போது தான் அவருக்குத் தெரிந்தது மனித வாழ்க்கை என்பது எவ்வளவு மகிழ்ச்சிகள் கொண்டது என்று. பயணங்கள், நண்பர்களுடனான சந்திப்புகள், இலக்கியவாசிப்பு, இசை. அவர் எழுதினார் ' எந்த இடத்தில் நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோமோ அந்த இடத்தில் நம் மனம் படிந்து விடுகிறது. அதுதான் நமது ஊர் என்று நினைக்கிறோம். எனக்கு அமெரிக்காவின் நகரங்கள் தான் பிடித்திருக்கின்றன. திருச்சி எனக்கு அன்னிய ஊராகத் தெரிகிறது. ஒரு நாளுக்குள் சலித்து விடுகிறது'

'என் பெற்றோர் மீது எனக்கு மரியாதையும் நன்றியும் உண்டு. அவர்களை நான் புரிந்து கொள்கிறேன். இருபத்திரண்டு வருடம் படி படி என்று மட்டுமே சொன்ன இரண்டு வயோதிபர்கள் அவர்கள். அவ்வளவு தான். அவர்களை நான் நேசிக்க வேண்டும் என்றால் அவர்களை எனக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அவர்களின் மனம் எனக்குப் புரிந்திருக்க வேண்டும். எனக்கு அவர்கள் அன்னியர்கள் போலத் தெரிகிறார்கள்'

'இருபத்திரண்டு வருடம் அவர்கள் எங்களிடம் பொதுவாக எதையும் உரையாடியதே இல்லை.

படிப்பையும் எதிர்காலத்தையும் பற்றிய கவலைகளை கொட்டிக் கொண்டே இருப்பார்கள். இப்போது அவர்கள் பேச நினைத்தாலும் பேசுவதற்கான தொடர்பு இல்லை.

இப்போது கூட நீ என்ன சம்பளம் வாங்குகிறாய், என்ன மிச்சம் பிடித்தாய் என்று பயம் காட்ட மட்டுமே அவர்களால் முடிகிறது.

'நீங்களே சொல்லுங்கள், அரைமணி நேரம் கூட பேசிக் கொள்ள பொதுவாக ஏதும் இல்லாதவர்களிடம் நாம் எவ்வளவு தான் செயற்கையாக முயன்றாலும் பேசிக் கொண்டிருக்க முடியுமா?

முற்றிலும் அன்னியமாகத் தெரியும் ஓர் ஊரில் எவ்வளவு நாள் வாழ முடியும்? மரியாதைக்காகவோ நன்றிக்காகவோ ஐந்து நாள் இருக்கலாம்.

அதற்கு மேல் என்ன செய்வது?' 'என் இளமைப்பருவம் முழுக்க வீணாகி விட்டது என்று தான் நினைக்கிறேன்' என்றார் மகன் .

அந்தக் கடிதத்தை அப்படியே அவரது தந்தைக்கு அனுப்பினேன். 'இதைவிடத் தெளிவாக எதையும் நான் சொல்லிவிட முடியாது' என்றேன் . வாழ்க்கை என்பது எதிர்காலத்துக்கான போராட்டம் அல்ல.

வாழும் தருணங்களை உயிர்ப்புடன் வைத்துக் கொள்வது தான்.
அதற்காகவே பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் திருவிழாக்களும்
நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்டுள்ளன.
நாளை முக்கியம் தான்.
இன்று அதை விட முக்கியம்.

## ரஷ்ய தாக்குதலை தடுத்து நிறுத்த ஐரோப்பா தாமதித்து விட்டது

### உக்ரைன் ஜனாதிபதி

(கீவ்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் ஒரு மாதத்தை கடந்து தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. இந்நிலையில், பிரசெல்ஸ் நகரில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி ,

ரஷ்யாவிற்கு ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் தனது நாட்டிற்கு ஏற்பட்ட சேதத்தை அவர் கோடிட்டுக் காட்டினார், மேலும் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பா ஒன்றுபட்டதற்கு நன்றி தெரிவித்தார்.

பின்னர், ரஷ்யாவின் தாக்குதலை நிறுத்துவதில் அவர்கள் மிகவும் தாமதமாக செயற்பட்டதாக ஐரோப்பிய தலைவர்களிடம் தெரிவித்தார்.

நீங்கள் ரஷ்யா மீது தடைகளை விதித்துள்ளீர்கள். அதற்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம். இது சக்திவாய்ந்த நடவடிக்கை. ஆனால் சிறிது தாமதமாகிவிட்டது. அதாவது, தடுப்பதற்கு தடைகள் இருந்திருந்தால் ஒரு வேளை ரஷ்யா போருக்குச் சென்றிருக்காது என தெரிவித்தார். (நி-5)

## இரசாயன அ


## அமெரி

## ஸ

(வோஷிங்டன்
உக்ரைனுக்கு
அமெரிக்கா த
எச்சரித்துள்ளா

இவ்வாறான பதிலடி இரசாயன ஆயுதங்கள் பயன்பாட்டின் தன்மையைப் பொறுத்து அமையும் எனவும் பிரஸ்ஸல்ஸில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய பைடன் இவ்வாறு தெரிவித்தார்.

# ரஷ்யாவின் பிரமாண்டமான போர்க்கப்பலை அழித்துள்ளதாக உக்ரைன் அறிவிப்பு



(கீவ்)

உக்ரைனின் பெர்டியன்ஸ் நகர் அருகே நங்கூரமிடப்பட்டிருந்த, ரஷ்யாவின் பிரமாண்டமான போர்க்கப்பலை உக்ரைனிய கடற்படை அழித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள, மரியுபோல் நகரில் இருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ள பெர்டியன்ஸ் நகர் அருகே, ரஷ்யாவின் பிரமாண்டமான போர்க்கப்பலான ஓர்ஸ்க் நங்கூரமிடப்பட்டிருந்தது.

20 டாங்குகள், 45 கவச வாகனங்கள், 400 துருப்புகளை சுமந்து செல்லும் திறன் கொண்ட இந்த பிரமாண்டமான போர்க்கப்பலை நேற்று முன்தினம் வியாழக்கிழமை உக்ரைனிய கடற்படை அழித்துள்ளதாக அறிவித்தது.

எனினும், இந்தக் கப்பல் அழிக்கப்பட்டது குறித்து ரஷ்ய தரப்பில் எந்தவிதமான தகவலும் உறுதிப்படுத்தப்படவில்லை. அதேவேளை இதுதொடர்பான புகைப்படங்கள் சர்வதேச ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தினால்
# ரிக்கா பதிலடி கொடுக்கும்
## பைடன் எச்சரிக்கை



ன்)

**த எதிரான போரில் இரசாயன ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தினால் தக்க பதிலடி கொடுக்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ார்.**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போருக்கு மத்தியில் நேட்டோ முன்னர் எப்போதும் இருந்ததை விட ஒன்றுபட்டுள்ள தாகவும் பைடன் தெரிவித்தார்.

நேட்டோ பிளவுபட வேண்டும் என புடின் விரும்பினார். ஆனால் அவரது போர் நேட்டோவை மேலும் பலமாக்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் 20 பெரிய பொருளாதார நாடுகளின் குழுவான ஜி20 கூட்டமைப்பில் இருந்து ரஷ்யாவை வெளியேற்றுவதை ஆதரிப்பதாகவும் பைடன் தெரிவித்தார்.

உக்ரைனுக்கு நேட்டோ கூட்டணி நாடுகள் ஆயுத உதவி உள்ளிட்ட "பயனுள்ள மற்றும் கட்டுப்பாடற்ற" ஆதரவை வழங்க வேண்டும். ரஷ்யாவுக்கு இன்னும் கடுமையான எதிர் வினையாற்ற வேண்டும்.

இல்லாவிடில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நேட்டோ நாடான போலந்துக்கும் பரவும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கருத்து வெளியிட்ட சில மணி நேரங்களில் பைடன் இவ்வாறான கருத்தை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 'ரூபிள்' மட்டுமே ஏற்கப்படும்
## புடின் அதிரடி அறிவிப்பு

(மொஸ்கோ)

நட்பற்ற நாடுகளுக்கு எரிவாயு விநியோகத்திற்கான கட்டணத்தை ரஷ்ய ரூபிள்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளைச் செயற்படுத்த முடிவு செய்துள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.

குறித்த மாற்றங்களை ஒரு வாரத்திற்குள் செயற்படுத்தவும் உத்தரவிட்டுள்ளார். அரசாங்கமும் மத்திய வங்கியும் இந்த நடவடிக்கைகளை ரஷ்ய நாணயத்திற்கு எவ்வாறு நகர்த்துவது என்பது குறித்த ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு ஒரு வாரம் அவகாசம் இருப்பதாகவும், எரிவாயு ஒப்பந்தங்களில் தொடர்புடைய மாற்றங்களைச் செய்ய உத்தரவிடப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் மீது ரஷ்யா யுத்தம் மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், மேற்கு நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.


இதற்கிடையே, ரஷ்யா நட்பற்ற நாடுகளின் பட்டியலை அறிவித்தது. இந்தப் பட்டியலில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், பிரிட்டன், ஜப்பான், கனடா, நோர்வே, சிங்கப்பூர், தென்கொரியா, சுவிட்சர்லாந்து மற்றும் உக்ரைன் ஆகியவை அடங்கும்.

ரஷ்ய எரிவாயு மீதான தடைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், பல ஐரோப்பிய நாடுகள் மொஸ்கோவிலிருந்து உக்ரைன் வழியாக எண்ணெய் இறக்குமதி செய்து வருகின்றன.

இந்நிலையில், எரிவாயு விற்பனைக்கு ரூபிள் மட்டுமே ஏற்கப்படும் என்ற புடினின் அறிவிப்பு, ஐரோப்பாவை கடுமையாக பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)

# உக்ரைன் போர்க்களத்தில் இருந்து 'சிம்பா' சிங்கம் வெளியற்றம்





(கீவ்)

உக்ரைனில் இருந்து நான்கு நாட்கள் பயணத்துக்கு பிறகு சிம்பா சிங்கம் மற்றும் ஓநாய் பாதுகாப்பாக ருமேனியா நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

போரால் மக்கள் மட்டுமின்றி விலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மிருகக்காட்சி சாலையில் உள்ள விலங்குகளை பராமரிக்க முடியாத காரணத்தால் அவைகள் தவித்து வருகின்றன. விலங்குகளுக்கு போதுமான உணவுகள் கிடைக்கவில்லை.

தென்கிழக்கு உக்ரைனில் உள்ள ஜிபோரிஜியாவில் மிருகக்காட்சிச்சாலையில் சிம்பா என்ற சிங்கம் பராமரிக்கப்பட்டது. போர் காரணமாக சிங்கத்தை ருமேனியாவுக்குக் கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது.

அதேபோல் அனகலா என்று பெயரிடப்பட்ட ஓநாயையும் கொண்டு செல்லும் ஏற்பாடுகளை விலங்குகள் உரிமை குழு மேற்கொண்டது.

இதையடுத்து சிம்பா சிங்கம் மற்றும் ஓநாய் கூண்டுகளில் அடைக்கப்பட்டது. பின்னர் அந்த கூண்டுகள் வானில் ஏற்றப்பட்டு ருமேனியாவுக்கு புறப்பட்டது.

போரச் சூழலில், ஆபத்துக்கள் நிறைந்த பகுதிகளில் பயணத்தை மேற்கொண்டனர். நான்கு நாட்கள் பயணத்துக்கு பிறகு சிங்கம் மற்றும் ஓநாய் பாதுகாப்பாக ருமேனியா நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டன. (நி-5)

## பாதுகாப்பு மீதான மிகப்பெரிய அச்சுறுத்தலே
# ரஷ்ய படையெடுப்பு - நேட்டோ

(பிரஸ்ஸல்ஸ்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, இந்தத் தலைமுறையில் நிகழ்ந்த பாதுகாப்பு மீதான மிகப் பெரிய அச்சுறுத்தல் என நேட்டோ அமைப்பின் பொதுச்செயலர் ஜென்ஸ் ஸ்டோல்டன் பெர்க் தெரிவித்துள்ளார்.

பிரஸ்ஸல்ஸில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒன்று கூடிய நேட்டோ அவசரகால உச்சி மாநாட்டில் விவாதிக்கப்பட்டது குறித்து எடுத்துரைத்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'தங்களின் சுதந்திரம் மற்றும் வருங்காலத்திற்காக உக்ரைன் மக்கள் தைரியத்துடனும் உறுதியுடனும் சண்டையிட்டு வருகின்றனர்.

நாங்கள் உக்ரைன் மக்களுடன் துணைநிற்கிறோம். உயர் தயார் நிலையுடன் கூடிய அதிகளவிலான படைகள் கிழக்குப்பகுதியில் நிறுத்தப்படும். வான் தளத்தில் அதிக ஜெட் விமானங்களும், கடல்வழி பாதுகாப்புக்காக, நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளிட்டவை நிறுத்தப்படும்.

இராணுவ ஆயுதங்கள் அதிகரிப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு உள்ளிட்டவை பலப்படுத்தப்படும். அணு ஆயுதங்கள் மற்றும் உயிரி ஆயுத அச்சுறுத்தல்களுக்கு எதிராக உக்ரைனை பாதுகாத்துக்கொள்ள நேட்டோ உதவும்' என தெரிவித்தார். இந்த மாநாட்டில் கிழக்கு ஐரோப்பாவில் தங்களின் பாதுகாப்பை வலுப்படுத்த நேட்டோ நாடுகள் ஒப்புதல் தெரிவித்துள்ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமேஸ்வரம் மீனவர்கள்

# காலவரையறை இன்றி வேலை நிறுத்த போராட்டம்

(சென்னை)

**இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்யக் கோரி மத்திய மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் விதமாக இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.**

மேலும் மீனவர்களின் கோரிக்கையை மத்திய மாநில அரசுகளுக்கு எடுத்துக் கூறும் விதமாக இன்று இராமேஸ்வரம் பேருந்து நிலையம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் 800 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த வேலை நிறுத்தத்தால் நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் பாதிப்படையும்.

எப்போதும் பரபரப்பாகக் காணப்படும் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் மீனவர்களின் வேலை நிறுத்தம் காரணமாக வெறிச்சோடி காணப்பட்டது. (4-5-285)

## குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் திருட்டின் மூலம் சிக்கினர்

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு றெட்பானாப் பகுதியில் நேற்று முன்தினம் வீடொன்றில் வீட்டு உரிமையாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் ஓட்டைப்பிரித்து வீட்டுக்குள் நுழைந்த இரு திருடர்கள் அங்கிருந்த 4 பவுண் தாலிக் கொடியையும் 45 ஆயிரம் ரூபாய் பணத்தையும் திருடிக்கொண்டு முச்சக்கரவண்டியில் தப்பிச் சென்றனர்.

பின்னர் வீட்டு உரிமையாளருக்கு அயலவர்களால் வழங்கப்பட்ட தகவலையடுத்து திருடர்கள் பயணித்த முச்சக்கரவண்டியைப் பின்தொடர்ந்தார்.

அதனை அவதானித்த திருடர்கள் தருமபுரம் பகுதியில் வைத்து வேறு ஒரு முச்சக்கர வண்டியில் தப்பிக்க முயன்ற பொழுது அப்பகுதி இளைஞர்களினால் திருடர்கள் இருவரும் பிடிக்கப்பட்டு தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருடர்கள் இருவரும் கிளிநொச்சி நகரப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் 18 இற்கு மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்தது.

திருடர்கள் இருவரும் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (4-5-316)

# ஆத்திமோட்டைக் கிராமத்தில் மணல் அகழ்வால் தர்க்க நிலை

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆத்திமோட்டை கிராம பகுதியில் உள்ள அரச காணியில் தனிநபர்கள் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வுக்கான அனுமதிப் பத்திரங்களை பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை, ஆத்திமோட்டைப் பகுதியில் இடம்பெற்று வரும் மணல் அகழ்வை நிறுத்தக் கோரி ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினர் அப்பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனங்களை இடைமறித்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதனால் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கும் ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த இலுப்பைக்கடவை பொலிஸார் குறித்த விடயம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதாக தெரிவித்து மண் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை செல்ல அனுமதித்தனர்.

ஆத்திமோட்டை பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற மணல் அகழ்வை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இவ்வாறு குறித்த பகுதியில் மணல் அகழ்வு உடனடியாக நிறுத்தப்படாது விட்டால் குறித்த பகுதி மக்கள், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என ஆத்திமோட்டை கமக்கார அமைப்பினர் கவலை தெரிவித்தனர். (4-5-285)

## கலைவிழா

(நெளுக்குளம்)

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலையின் 27 ஆவது கலைவிழா நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு சுத்தானந்த இந்து இளைஞர் சங்க செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த நிகழ்வானது இன்று 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் மருத்துவர் ப.சத்தியநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-5-299)

## பொதுக் கூட்டம்

(குருமன்காடு)

வவுனியா அழகக கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா, உள்வட்ட வீதியில் அமைந்துள்ள பலநோக்கு பயிற்சி நிலையத்தில் குறித்த பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

குறித்த பொதுக்கூட்டம் காரணமாக அன்றைய தினம் வவுனியா மாவட்டத்தில் உள்ள அழகக நிலையங்கள் பூட்டப்பட்டிருக்கும் எனவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (4-5-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 350 |
| தக்காளி | 80 | 70 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 110 | 100 |
| கோவா | 80 | 100 | 100 | 100 |
| கரட் | 140 | 180 | 240 | 240 |
| பூசணி | 60 | 70 | 60 | 100 |
| புடோல் | 150 | 150 | 140 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 180 | 140 | 140 | 180 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 150 |
| பீற்றூட் | 120 | 140 | 130 | 150 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 1400 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | - | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 40 | 100 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 160 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 140 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 120 | 60 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | - | - | 50 | - |

## பாடசாலை வளாகத்திற்குள் புகுந்து ஆசிரியர் மீது தாக்குதல்

(குருமன்காடு)

வவுனியாவில் பாடசாலை ஒன்றில் உள்ள ஆசிரியர் ஒருவர் மீது மூன்று நபர்கள் இணைந்து தாக்குதல் மேற்கொண்டத்தில் படுகாயமடைந்த ஆசிரியர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பாடசாலை ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்த போது காலை பாடசாலைக்குள் சென்ற குறித்த பாடசாலை மாணவன் ஒருவரின் தந்தை உள்ளிட்ட மூவர், பாடசாலை வளாகத்தில் நின்ற ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் தலையில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் சக ஆசிரியர்களின் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சம்பவ இடத்திற்கு விரைந்த செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-250)

# புதையல் தோண்டிய அறுவருக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் கடந்த 22 ஆம் திகதி இரவு புதையல் தோண்டிய 6 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

பனிக்கன்குளம் பகுதியில் சிலர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக மாங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இடத்தை சுற்றிவளைத்த மாங்குளம் பொலிஸார் குறித்த இடத்தில் இருந்த 6 பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரையும் மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023

## ஒன்பதில் வருகிறது ராகு; உன்னத வாழ்க்கை இனிமேல்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம் வரை)**

**பெயரின் முதல் எழுத்துக்கள்: ம, மி, மு, மெ, மோ, ட, டி, டு, டே உள்ளவர்களுக்கும்**

**சிம்ம இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் இருந்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி 9ஆம் இடத்திற்கு வரப்போகிறார். கேது பகவான் அதே நாளில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் இருந்து வெற்றிகள் ஸ்தானமான 3 ஆம் இடத்திற்கு செல்கிறார். அங்குள்ள நட்சத்திரக் கால்களில் வரும்பொழுது அவற்றிற்கேற்ப ஒன் றரை ஆண்டு காலம் பலன்களை வழங்குவார்கள்.

### 9 ஆம் இடத்தில் ராகு, 3 ஆம் இடத்தில் கேது

ராகு பகவான் 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். இதனால் உங்கள் பாக்கிய ஸ்தானம் பலப்படுகிறது. தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். தந்தை வழி உறவில் ஆதாயம் உண்டு. தர்ம காரியம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். பங்காளிகள் பக்கபலமாக இருப்பர். பதவி வாய்ப்புகள் தானாக வந்து சேரும். மங்கல காரியங்கள் மனையில் நடைபெறும். 3இல் கேது சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகள் உதவிகரமாக இருப்பர். பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையும். பகல் இரவாக பாடுபட்டதற்கு பலன் கிடைக்கும். உற்சாகத்தோடு பணிபுரிந்து உயர்ந்த நிலையை அடைய முயற்சிப்பீர்கள். பொருளாதாரத்தில் இதுவரை இருந்த பற்றாக்குறை அகலும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்திகள் வந்து சேரும்.

### சூரிய சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பொன்னான வாய்ப்புகள் வந்து சேரும். அருளாளர்களின் ஆலோசனைகளும், அனுபவம் உள்ளவர்களின் அறிவுரைகளும் அவ்வப்போது கை கொடுக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் நல்ல சம்பவங்கள் நிறைய நடைபெறும்.

தடைகளைத் தாண்டி முன்னேற்றம் காண்பீர்கள். சொத்துக்கள் வாங்குவதும், விற்பதும் கைவந்த கலையாகும். என்னயிருந்தாலும் ராகு பகை கிரகத்தின் காலில் சஞ்சரிப்பதால், தொழிலில் ஏற்ற இறக்க நிலை வந்து கொண்டுதான் இருக்கும். திசாபுத்திக்கேற்ற சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் நிலைமை உடனடியாக மாறலாம்.

### சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (23.5.2022 முதல் 28.1.2023 வரை)

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், தொழிலில் இலாபமும் கிடைக்கும். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவரது காலில் ராகு வரும்பொழுது முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். கண்ணூறு படும் விதத்தில் உங்கள் வளர்ச்சி இருக்கும். தொழிலுக்கு தேவையான மூலதனம் கிடைக்கும். இதுவரை நெருக்கடி நிலையில் இருந்த நீங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். பலநாட்களாக நடைபெறாத காரியம் இப்பொழுது சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

### கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம் (29.1.2023 முதல் 7.10.2023 வரை)

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, தடைப்பட்ட திருமணங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். வருமானம் போதுமானதாக இருக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் கைகூடும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்களின் நட்பால் பல காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து இணைவர். தனவரவு திருப்தி தரும். உடன் பிறந்தவர்களால் நன்மைகள் கிடைக்கும். முன்னேற்றப் பாதையில் செல்ல முக்கியப் புள்ளிகள் வழிவகுத்துக் கொடுப்பர்.

### குரு சாரத்தில் கேது சஞ்சாரம்(21.3.2022 முதல் 25.9.2022 வரை)

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளின் கல்யாணப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும். அசையாச் சொத்துக்களால் ஆதாயம் உண்டு. தொழில் கூட்டாளிகளால் ஏற்பட்ட பிரச்சினையை பஞ்சாயத்துக்கள் மூலம் சரிசெய்வீர்கள். மனச்சஞ்சலங்கள் அகலும். வீடு மற்றும் சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஊக்குவிப்பு உற்சாகத்தைக் கொடுக்கும். வெளிநாட்டில் உள்ள நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். உறவினர்கள் வழியில் ஏற்பட்ட மனவருத்தம் நீங்கும்.




### ராகுவின் சாரத்தில் கேது சஞ்சாரம்(26.9.2022 முதல் 3.6.2023 வரை)

சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பயணங்களால் பலன் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவும், கல்யாணம் சம்பந்தமாகவும் எடுத்த முயற்சி கைகூடும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் வாங்கல்களில் பெரிய அளவில் முதலீடு செய்வீர்கள். எதையும் சாதிக்கும் நம்பிக்கையோடு செயற்படுவீர்கள். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டி அதில் வெற்றியும் காண்பீர்கள். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

### செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம் (4.6.2023 முதல் 7.10.2023 வரை)

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாயின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, உங்களுக்கு யோகமான நேரம் தான். உற்றார் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்கள் நல்ல தகவலை கொண்டு வருவர். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். திடீர் தனவரவும் உண்டு. மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டுத் தொழில் தனித்தொழிலாக மாறும். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி ஏற்படும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். இக்காலம் உங்களுக்கு இனிய காலமாகவே அமையும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

இந்த ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், குரு பகவான் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசிக்கு குரு பெயர்வதால், பொருளாதார நிலை திருப்தி தரும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். அருளாளர்களின் ஆதரவோடு சில நல்ல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. பயணங்கள் பலன் தரும். பக்குவமாகப் பேசிக் காரியஙங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

22.4.2023 அன்று மேஷ ராசிக்கு குரு பெயர்ச் சியாகிறார். அங்கிருந்து உங்கள் இரா சியைப் பார்ப்பதால், எல்லா வழிகளிலும் நன்மைகள் கிடைக்கும். குறிப்பாக இதுவரை நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

### சனிப் பெயர்ச்சிக் காலம்

16.3.2023 அன்று கும்ப ராசிக்கு சனி பகவான் செல்கிறார். அப்பொழுது உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சனி வருவதால் கண்டகச் சனி நடைபெறப் போகிறது. எனவே விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம். வெளிவட்டாரப் பழக்கவழக்கத்தில் விழிப்புணர்ச்சி தேவை. உடல்நலக் குறைபாடுகளும், வைத்தியச் செலவுகளும் மேலோங்கும். நினைத்த காரியம் நடைபெறுவதில் தடைகள் அதிகரிக்கும். நேசித்த நண்பர்கள் பகையாக மாறுவர்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சி நன்மை தரும் விதத்திலேயே உங்களுக்கு அமையப் போகின்றது. குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு.

சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு கண்டகச் சனியின் ஆதிக்கம் வருவதால் சிந்தித்து செயற்படுவது நல்லது. எதிலும் அவசரம் காட்ட வேண்டாம். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் இடத்தில் பதவி உயர்வும் உண்டு. இல்லத்தில் தினமும் திருவாசகம் படித்து சிவன் உமையவளை வழிபடுங்கள்.


(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## புண்ணியம் எது?

ஒரு பக்தர் திரிவேணி சங்கமத்திற்குப் போய்க் குளித்துத் தன் பாவத்தைப் போக்கிக் கொள்ள விரும்பினார். அவர் வசித்த ஊர் திரிவேணி சங்கமத்திலிருந்து வெகு தூரத்தில் இருந்ததால் அவர் தம் வயதான தாய், தந்தையர் களை உறவினர் வீட்டில் விட்டு விட்டு புனித யாத்திரை செய்ய கிளம்பினார்.

அவர் பல புனித நதிகளில் நீராடி விட்டுத் திரிவேணி சங்கமத்தை நோக்கிச் செல்லலானார்.

வழியில் சேவானந்தர் என்ற மாபெரும் முனிவரது ஆசிரமம் இருக்கிறது என்றும் அவரைத் தரிசித்தால் புண்ணியம் கிடைக்கும் என்றும் பலர் சொல்லவே அதைக் கேட்ட பக்தரும் அந்த முனிவரைக் காண அந்த ஆசிரமத்திற்குச் சென்றார்.

அந்த முனிவர் தவம் எதுவும் செய்யாமல் எல்லோரையும் போல வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருப்பதை பக்தர் அந்த ஆசிரமத்திற்கு போனபோது கண்டு திகைத்துப் போனார்.

சேவானந்தர் சமையல் செய்து விட்டுத் தம் தாய்,தந் தையர்களைக் குளிப்பாட்டி சாப்பாடு போட்டு விட்டு வெளியே வந்தார். அவர் தன்னைக் காணக் காத்திருந்த பக்தரைப் பார்த்து "அப்பனே! என்னால் உனக்கு என்ன ஆக வேண்டுமோ?" என்று கேட்டார்.

பக்தரும் பணிவுடன் "மகாத்மாவே! தங்கள் புகழைக் கேட்டுத் தங்களை தரிசித்து விட்டு திரிவேணி சங்கமத்திற்குப் போகப் போகிறேன். அது மிக அருகில்தான் இருக்கிறதாமே. அதற்குப் போக வழி சொல்ல வேண்டும்" என்று கேட்டார். சேவானந்தரும் "என் தாய், தந்தையருக்குப் பணிவிடை செய்து கொண்டே என் காலத்தைக் கழிக்கும் எனக்கு இதுபற்றி எல்லாம் தெரியாது.

நான் இந்த ஆசிரமத்தை விட்டு எங்கு சென்றதும் இல்லை. இப்போதே என் பெற்றோர்கள் சாப்பிட்டு முடித்திருப்பார்கள். அவர்களுக்குப் பணிவிடை செய்யப் போக வேண்டும்" என்று கூறிவிட்டு உள்ளே போய் விட்டார்.

அப்போது மூன்று பெண்மணிகள் கவலை தோய்ந்த முகத்துடன் அலங்கோலமாய் அந்த ஆசிரமத்தின் உள்ளே போவதை அவர் கண்டார்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




மகனையும் மருமகளையும் அவர்கள் வாழ்த்தி அனுப்பினர்; இலக்குவனை ஏத்திப் புகழ்ந்தனர். இராமன் தாயாரை அரிதிற் பிரிந்து வசிட்டரை வணங்கிப் பின் தன் தம்பியும் சீதையுமாய்த் தேர் ஒன்றில் ஏறிச் சென்றான்.

**காடு அடைதல்**

இராமனைத் தொடர்ந்து நாட்டு மக்கள் பின் தொடர்ந்தனர்; இரண்டு யோசனை தூரம் நடந்தனர்; அவர்கள் வட்ட வடிவமாய் ஒரு யோசனை தூரம் இராமனைச் சூழ்ந்து கொண்டனர்.

இந்த மாபெருங் கூட்டத்தை எப்படித் திருப்புவது? என்று யோசித்தான்; இருட் பொழுது வந்தது; இராமன் சுமந்திரனைத் தனியே அழைத்தான். "நீ தேரை அயோத்திக்குத் திருப்பு" என்றான். சுமந்திரன் வியப்பு அடைந்தான்; இராமன் நாடு திரும்புகிறான் என்று நினைத்தான்.

"மக்கள் தேர்ச் சுவடு கண்டு நான் திரும்பி விட்டதாய் நினைப்பர்; நாடு திரும்புவர்; அவர்களைத் திசை திருப்ப வேறு வழியில்லை; அவர்களைத் தடுத்து நிறுத்த இயலாது" என்று கூறினான்.

சுமந்திரன் சூழ்நிலையை அறிந்து கொண்டான்; வேறு வழி இல்லை.

சுமந்திரன் துன்பச் சுமையைச் சுமந்து நின்றான்; இராமன் திருமுகம் நோக்கினான்.

"என்ன? ஏன் தயக்கம்?" என்றான்.

மயக்கம் என்றான்.

"தசரதனை அன்னை கைகேயி கொல்லாமல் விட்டாள்; நான் கொன்று முடிப்பேன்" என்றான்.

"நின்று கொண்டு ஏதோ உளறுகிறாய்" சென்றுவா; என்றான்.

"இராமன் காடு ஏகினான் என்று நான் எப்படிச் சொல்வது? சொன்னால் அவர் வீடு சேர்தல் உறுதி" என்றான்.

"என் செய்வது? நான் திரும்புவேன் என்பது இயலாத செயல்; அதைத் தருமம் விரும்பாது, கடமை தவறினால்; அது மடமையாகும்; அரசனும் வாய்மை தவறான்; அவர் சொல்லுக்கு உறுதி சேர்க்கிறேன்; அதனால் வரும் இறுதிகளைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும்; இழப்பு சிறிது; புகழ் பெரிது; இதை அறிக: நீ திரும்புக" என்றான். "மறுமொ ழி கூறாமல் வேறு செய்திகள் சொல்லத்தக்கன உளவேல் செப்புக" என்று வேண்டினான்.

இராமன் அவனே செய்தியாய் அமைந்தான். சீதை வாய் திறந்தாள்.

"அரசர்க்கும் அத்தையர்க்கும் என் வணக்கத்தை இயம்புக" "பூவையையும், கிளியையும் போற்றுக என்று எம் தங்கையர் க்குச் சாற்றுக" என்று கூறினாள். அடுத்து இலக்குவன் பேசினான். "இராமன் காட்டில் காயும், கனியும், கிழங்கும் உண்கிறான் மன்னனை நாட்டில் சத்திய விரதன் என்று சொல்லிக் கொண்டு நித்தியம் சுவை ஆறும் கொண்ட உணவினை உண்ணச் சொல்க"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமையாலே வளம் பெறுவோம் – பசித்
தொல்லை அகலத் தொழில் புரிவோம்.
*– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசாங்கத்தை அகற்றுவதற்கு பௌத்த பீடாதிபதிகள் ஆசி வழங்கினரா?

நாட்டின் ஆட்சியை யார் பொறுப்பெடுத்தாலும் இனி எதுவும் செய்ய முடியாதென்ற அளவில் நிலைமை வந்துவிட்டது.

அந்தளவுக்கு இலங்கையின் சொத்துக்கள் அத்தனையும் அடியொட்ட இறைக்கப்பட்டாயிற்று.

நிலைமை இதுவாக இருந்தபோதிலும் ஆட்சியாளர்களைக் கவிழ்க்கும் பலம் எதிர்க்கட்சிகளிடம் இல்லை என்பதும் தெரிந்த விடயமே.

ஆம், சஜித் பிறேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் மக்கள் எழுச்சிக்குத் தலைமை தாங்கும் வல்லமை கொண்டவர்கள் அல்ல.

மாறாக சஜித் பிறேமதாஸவும் ரணில் விக்கிரமசிங்கவும் பிரிந்து நிற்பதும் எதிர்க்கட்சிகளின் பலத்தைக் குறைத்துள்ளது.

தவிர, ஓர் ஆசனத்தைக்கூட வெற்றி கொள்ள முடியாத ரணில் விக்கிரமசிங்கவை நம்பி எதுவும் செய்ய முடியாதென்ற கருத்தியலும் தென்பகுதி அரசியலில் உண்டு.

இந்நிலையில், ஆளுந் தரப்பை அகற்ற முடியாதோ என்றால், இல்லை அதுவும் நடக்கக்கூடிய சாத்தியம் உண்டு எனலாம்.

இதை நாம் கூறும்போது, அது எப்படிச் சாத்தியமாகும் என்று நீங்கள் கேட்டால், ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய பங்காளிக் கட்சிகள் அதனை நிறைவேற்றப் போகின் றன என்பதைத் துணிந்து கூறமுடியும்.

ஆம், அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் (24) கண்டிக்குச் சென்று மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பாவிட்டால், நாடு மிக மோசமாகி விடும் என்ற கருத்தை அவர்கள் பௌத்த பீடாதிபதிகளிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

அதிலும் குறிப்பாக அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ, கம்மன்பில ஆகியோர் அரசாங்கத்தை அகற்றியே ஆக வேண்டும் என்பதில் கடும் பிடியாக இருக்கின்றனர்.

அந்த விடயத்தை மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளிடம் மிகத் தெளிவாகக் கூறியும் வைத்துள்ளனர்.

தவிர, மேற்போந்த சந்திப்பு ஆட்சிக் கவிழ்ப்புக்கு பௌத்த பீடாதிபதிகளின் ஆசியையும் ஆதரவையும் பெற்றுக்கொள்கின்ற ஒரு நிகழ்வாகவும் அமைவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆக, அரசாங்கத்தை அகற்றுகின்ற பணியை அரச பங்காளிக் கட்சிகள் கூட்டாக இணைந்து செய்யும்போது, அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவும் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

எனவே எதிர்வரும் காலங்கள் ஆளுந்தரப்புக்கு அவ்வளவு நல்லதாக இல்லை என்பதைக் கூறமுடியும்.

இவ்வாறு துணிந்து கூறுவதற்கு இருக்கக்கூடிய ஒரே ஆதாரம்; அரசாங்கத்தை அகற்றுவதற்கு பௌத்த பீடாதிபதிகள் சம்மதம் தெரிவித்து விட்டனர் என்பதை முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தடிப்பான அதட்டலில் வெளிப்படுகிறது.

### ஒரு இலட்சம் தற்காலிகமான உதவித் தொகையே

# உறவுகள் விடயத்தில் இறுதி தீர்மானம் எடுத்தபின் இழப்பீட்டை தீர்மானிப்போம்

## கூட்டமைப்புடனான சந்திப்பில் ஜனாதிபதி

(கொழும்பு)

'காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளிற்கு வழங்கப்பட்ட தீர்மானித்துள்ள ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு அல்ல. அது, தற்காலிகமாக வழங்கப்படும் உதவித்தொகை. இந்த விவகாரத்தில் இறுதி தீர்மானம் எட்டப்படும்போது, அவர்களிற்கான இழப்பீட்டு தொகை தீர்மானிக்கப்படும்' என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினருடனான நேற்றைய சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பின் போது, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு சுட்டிக்காட்டியது.

'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் முறையான விசாரணை நடத்தி அவர்களிற்கு என்ன நடந்தது என பொறுப்புக்கூற வேண்டும். குறிப்பாக படையினரிடம் சரணடைந்தவர்களிற்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் சாட்சியம் உள்ளவர்களிடமாவது உடனடியாக விசாரணையை தொடங்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படுமென்ற அரசின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல' என கூட்டமைப்பு சுட்டிக்காட்டியது.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, 'காணாமல் போனவர்களின் உறவினர்களிற்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு அல்ல. குடும்பத் தலைவரை இழந்து அல்லது ஒரு குடும்ப உறுப்பினரை இழந்து சிரமப்படும் அந்த குடும்பங்களிற்கு தற்காலிகமான ஒரு பொருளாதார ஆறுதலே அந்த கொடுப்பனவு. அதனை இழப்பீடாக கருதி வழங்கவில்லை. காணாமல் போனவர்கள் விடயத்தில் இறுதி தீர்மானம் ஒன்று எட்டப்படும் போது, இழப்பீட்டு தொகையை நாம் தீர்மானிக்கலாம்' என பதிலளித்தார். (ம)

## கொக்குவில் பகுதியில் முச்சக்கரவண்டி தீயிட்டு எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்குவில் பகுதியில் வீடொன்றில் காணப்பட்ட முச்சக்கரவண்டியொன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத மர்ம நபர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

நேற்று அதிகாலை மின்சாரம் தடைப்பட்டிருந்தவேளை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகள் வெளியாகி தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** முகாமைத்துவ பீடம், பால் பண்ணை-கலாசாலை வீதி, ஞானபாஸ் கரோதயா வீதி, பால் பண்ணை சந்தி-இராஜ வீதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** விமானப் படை முகாம் வேளாங்குளம், மடுகுளம், பூவரசங்குளம், புலவனூர், பூவரசங்குளம், சாளம்பைக் குளம், சாளம்பைக்குளம், வீட்டுத்திட்டம், செங்கற் படை, சின்னத்தம்பனை (மடுகுளம்), சோபாலா புளியங்குளம், தாலிக் குளம், வேளாங்குளம், பம்பைமடு பல்கலைக் கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், அறுகம்புல் வெளிகூமாங்குளம், கூமாமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பொன்னாவரசங்குளம், சாளம்பை புதிய வீட்டுத்திட்டம், சாளம்பைக்குளம் பல்கலைக்கழக வளாகம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** இலங்கை வங்கி-கிளிநொச்சி, பிருந்தா உற்பத்தியாளர், கார்கில்ஸ் பூட்சிற்றி, கச்சேரி, மக்கள் வங்கி-கிளிநொச்சி, சதொசா கிளிநொச்சி, சிவநருட்செல்வன் அரிசி ஆலை, விளையாட்டு வளாகம், சன் தளபாடங்கள், நீர்வழங்கல் சபை-கிளிநொச்சி, கிளிநொச்சி நகரம், 58 ஆம் பிரிவு இராணுவ முகாம், கந்தசாமி கோவில், கரடிப்போக்கு சம்பத் வங்கியடி-கிளிநொச்சி, விதை உற்பத்தி பண்ணையடி, திருநகர், வானவில், இராணுவ ஆதார வைத்தியசாலை-இரணைமடு, இரணைமடு நீர்ப்பாசனம், இரணைமடு இராணுவ தலைமையகம், இரணைமடு நீர்த்தேக்கம், சாந்தபுரம், திருவையாறு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## எல்லையற்ற இன்பம்

❖ இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்தின் அடிப்படையும் சுதந்திரத்திற்கான ஒரு போராட்டமே. இந்த இயல்பின் உந்து வேகத்தால்தான் மகான் பிரார்த்திக்கிறார்.

❖ செயலின் பாதை சரியான திசையில் இல்லை என்றால் அதை நாம் தீமை என்கிறோம். இதே உந்து வேகம் சரியான உயர்ந்த வழியில் வெளிப்படுமானால் அதை நன்மை என்று கூறுகிறோம். ஆனால் இரண்டிலும் உந்து வேகம் ஒன்று தான். சுதந்திரத்திற்கான போராட்டம் தான்.

❖ தான் கண்டுண்ட நிலையில் இருப்பதை அறிந்து மகான் வேதனை கொள்கிறார். அதிலிருந்து விடுபட விரும்புகிறார். அதற்காக இறைவனை வணங்குகிறார்.

❖ குறிப்பிட்ட சில பொருட்கள் தன்னிடம் இல்லையென்பதால் வேதனை கொள்கிறான். திருடன் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து அதிலிருந்து விடுபட விரும்புகிறான். அதனால் திருடுகிறான். எனவே உணர்வுள்ளதாகட்டும், உணர்வற்றதாகட்டும் இயற்கை அனைத்திற்கும் ஒரே இலட்சியம் சுதந்திரம் தான். அறிந்தோ, அறியாமலோ ஒவ்வொன்றும் அந்தச் சுதந்திரத்திற்காகவே போராடிக் கொண்டிருக்கின்றன.

❖ ஆனால் ஒரு மகான் தேடுகின்ற சுதந்திரம், திருடன் தேடுகின்ற சுதந்திரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மகான் நாடுகின்ற சுதந்திரம் அவரை எல்லையற்ற இன்பத்துக்கு, விவரிக்க முடியாத ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்கிறது. திருடன் நேசிக்கின்ற ஒன்றோ அவனது ஆன்மாவை மேன்மேலும் பல்வேறு சங்கிலிகளால் கட்டிச் சிறையிலிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 28

### தென் மாகாணம் இனங்கள் அடிப்படையில் சனத்தொகை மாற்றம் -2012

இன அடிப்படையில் சனத் தொகை வேறுபாடு அட்டவணை (g3) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தென் மாகாண சனத்தொகையில் பெரும்பான்மையினர் (95.0%) சிங்களவர்களாவர். இரண்டாவதாக முஸ்லிம்கள் 2.9% காணப்படுகின்றனர். அத்தோடு தமிழர்கள் 1% காணப்படுகின்றனர். ஏனைய இனங்களான இந்தியத் தமிழர், பறங்கியர் மலாயர், இலங்கை செட்டிகள் மற்றும் பாரத சனத் தொகை 1.1%) ஆகும். இலங்கை சிங்கள சனத்தொகையில் 15.4% தென் மாகாணத்தில் வசிக்கின்றனர்.

அட்டவணை g(3) இன அடிப்படையிலான விகிதாசார வேறுபாடு-தென் மாகாணம்

| பிரதேசம் | சிங்களவர் % | இலங்கைத் தமிழர்% | இந்தியத் தமிழர்% | இலங்கை முஸ்லிம்% | வேறு% |
|---|---|---|---|---|---|
| காலி | 94.4 | 1.3 | 0.6 | 3.6 | 0.1 |
| மாத்தறை | 94.3 | 1.1 | 1.5 | 3.1 | 0.0 |
| அம்பாந்தோட்டை | 97.1 | 0.4 | 0.0 | 1.1 | 1.5 |
| தென் மாகாணம் | 95.0 | 1.0 | 0.7 | 2.9 | 0.4 |

### தென் மாகாணம் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-2012

சமய அடிப்படையில் சனத் தொகை வேறுபாடு அட்டவணை g(4) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தென் மாகாணத்தில் பெரும்பான்மை (94.7%) பௌத்தர்களாகும். 3.2% இஸ்லாமியர்கள் இரண்டாம் இடத்திலும் 1.3% இந்துக்கள் மூன்றாம் இடத்திலும் உள்ளனர். இலங்கையின் மொத்த பௌத்த சனத் தொகையில் 16.4% தென் மாகாணத்தில் வசிக்கின்றனர்.

அட்டவணைg(4): சமய அடிப்படையில் சனத்தொகை விகிதாசார வேறுபாடுதென் மாகாணம்

| பிரதேசம் | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | உரோமன் கத்தோலிக்கம் | வேறு |
|---|---|---|---|---|---|
| காலி | 93.9 | 1.5 | 3.7 | 0.4 | 0.5 |
| மாத்தறை | 94.1 | 2.0 | 3.1 | 0.3 | 0.4 |
| அம்பாந்தோட்டை | 96.7 | 0.2 | 2.5 | 0.2 | 0.3 |
| தென் மாகாணம் | 94.7 | 1.3 | 3.2 | 0.3 | 0.4 |

### தென் மாகாணம் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்களின் கட்டமைப்பு

தென் மாகாணத்தில் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேச கட்டமைப்பு அட்டவணை g(5) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை g(5) நிர்வாக, உள்ளூராட்சி கட்டமைப்பு மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேச கட்டமைப்பு - தென் மாகாணம்

| பிரதேசம் | பிரதேச செயலகப் பிரிவுகள் | கிராம அலுவலர் பிரிவுகள் | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் |
|---|---|---|---|---|---|
| காலி | 19 | 895 | 01 | 2 | 17 |
| மாத்தறை | 16 | 650 | 01 | 1 | 15 |
| அம்பாந்தோட்டை | 12 | 576 | 01 | 1 | 10 |
| தென் மாகாணம் | 47 | 2121 | 03 | 4 | 42 |

தென் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை, வாக்கெடுப்பு பிரிவுகள், மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் பற்றிய தகவல்கள் 2017 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட விதம் அட்டவணை (g6) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணைg(6): தேர்தல் கட்டமைப்பு 2017 - தென் மாகாணம்

| பிரதேசம் | பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் | வாக்கெடுப்பு பிரிவு | வாக்கெடுப்பு மாவட்டம் |
|---|---|---|---|
| காலி | 848,877 | 10 | 703 |
| மாத்தறை | 644,800 | 07 | 446 |
| அம்பாந்தோட்டை | 479,498 | 04 | 413 |
| தென் மாகாணம் | 1,973,175 | 21 | 1,562 |

### காலி மாவட்டம் பற்றிய தகவல்கள்

தென் மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 29.8% இந்த மாவட்டத்துக்குரியது. 1,617 சதுர கிலோ மீற்றர் நிலப் பிரதேசத்தையும் 35 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர் பரப்பையும் கொண்டு காலி மாவட்டம் அமைந்துள்ளது. மாவட்ட பிரதேசத்தின் மொத்தப் பரப்பில் 2.1% உள்ளக நீர் வளங்களாகும்.

வடக்குத் திசையில் களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களையும் தெற்கு மற்றும் மேற்குத் திசையில் கடலையும் கிழக்குத் திசையில் மாத்தறை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு காணப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு மாவட்டத்தின் மொத்தப்பரப்பில் 213 சதுர கிலோ மீற்றர் அதாவது (12.9%) நிலப்பரப்பு வனப் பிரதேசமாக காணப்பட்டது. அயன மண்டல சிங்கராஜ மழைக் காடு இந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 1,063,334 ஆக காணப்பட்டது. மாவட்டத்தின் சன அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 658 ஆகும்.

**தென் மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 29.8% காலி மாவட்டத்துக்குரியது. வடக்குத் திசையில் களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களையும் தெற்கு மற்றும் மேற்குத் திசையில் கடலையும் கிழக்குத் திசையில்மாத்தறைமாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு காணப்படுகின்றது. சனத்தொகை கணக்கெடுப்பின் (2012) படி காலி மாவட்டத்தின் சன அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 658 ஆகும்.**

### காலி மாவட்டம் இனங்கள் மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை h(1) காட்டப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் 94.4% சிங்களவர்களாவர். அவர்களில் 93.9% பௌத்தர்கள் ஆவர். 3.6% இலங்கை முஸ்லிம்களாகும். இஸ்லாம் பக்தர்கள் 3.7% ஆக காணப்படுகின்றனர். மாவட்டத்தில் தமிழர்கள் (இலங்கை மற்றும் இந்திய தமிழர்கள்) மற்றும் இந்து பக்தர்களின் 2% ஐ விடவும் குறைவாக உள்ளனர்.




அட்டவணை h(1) இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு காலி மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களம் | 1,003,722 | 94.4 | பௌத்தம் | 998,647 | 93.9 |
| இலங்கைத் தமிழர் | 13,953 | 1.3 | இந்து | 15,584 | 1.5 |
| இந்தியத் தமிழர் | 6,146 | 0.6 | இஸ்லாம் | 39,267 | 3.7 |
| இலங்கை முஸ்லிம் | 38,790 | 3.6 | உரோமன் கத்தோலிக்கம் | 4,415 | 0.4 |
| வேறு | 723 | 0.1 | வேறு கிருஸ்தவம் | 5,315 | 0.5 |
| | | | வேறு | 106 | - |
| மொத்தம் | 1,063,334 | 100 | மொத்தம் | 1,063,334 | 100 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டீசல்...

அமர்வு மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனினால் அரைமணித் தியாலயம் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று காலை சபை மண்டபத்தில் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணி வண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது திடீரென மின்சாரம் இல் லாமல் போனது.

இதனால் டீசல் இயந்திரத்திற்கு போதிய அளவு டீசல் இல்லாத காரணத்தினால் சபை அமர்வு சிறிது நேரம் ஒத்திவைக் கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-18,33,104)

## யாழ்.கலாசார...

யான முறையில் இந்த திறப்புவிழா செய் யப்படவுள்ளதுடன் காணொளி முறையில் திறந்து வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

நேற்று இடம்பெற்ற யாழ்.மாநகர சபை அமர்வில் இந்த தகவலை மாநகர முதல் வர் வி.மணிவண்ணன் வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் கட்டி முடிக்கப்பட்டு நீண்டகாலமாக திறந்து வைக்கப்படாத நிலையில் அதனை யார் பராமரிப்பது என்பது தொடர்பில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் தற்போது திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாண கலாசார மண்டபம் திறப்புவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் யாழிற்கான இந்திய துணைத் தூதர், யாழ்.மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

(ம-33, 104)

## மக்களின்...

நாட்டை மீட்பதற்கான ஆணையை எங் களுக்கு வழங்குவார்கள். எனவே, ஆட்சி மாற்றம் என்பது பகல் கனவு கிடையாது.

நாட்டில் இன்று உணவுப் பாதுகாப்பு இல்லை. வாழ்வதற்காகப் போராட வேண் டிய நிலைமையே உள்ளது.

ஜனாதிபதியின் சர்வகட்சி மாநாட்டின் பின்னணியில் சூழ்ச்சி உள்ளது. இதை விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஏற்றுக்கொண்டுள்ளார்" என்றார். (ம)

தன நிதானய
திகதி - 2022.03.25
சீட்டிழுப்பு இலக்கம் - 747
M 03 06 13 21
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2022/03/25
சீட்டிழுப்பு இலக்கம் 4717
E 2 1 8 5 9 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1065
M 13 34 41 43 69

## நாட்டை விற்று...

வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

மக்கள் இப்படி கடும் கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கும் சந்தர்ப்பத்தில் அர சாங்கம் வெளிப்படைத்தன்மை இன்றி மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளை மக்கள் நிராகரித்து வருகின்றனர் எனவும் அஸ்கிரிய மாநாயக்கர் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் விமல் வீர வன்ஸ, உதய கம்மன்பில மற்றும் அமைச் சர் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டோர் நேற்று முன்தினம் மாநாயக்க தேரரை சந் தித்தபோதே அவர் இதனைக் கூறியுள் ளார். (ம)

## ரணில் தலைமை...

அத்தியாவசியப் பொருட்களின் விலை யேற்றம், எரிபொருட்கள் உள்ளிட்ட சமை யல் எரிவாயு ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, அரசாங்கத்தின் இயலாமை ஆகியவற்றை கண்டித்து, ஐக்கிய தேசியக் கட்சியினரால், கொழும்பு ஹைட்பார்க்கில், சத்தியாக்கிரக போராட்டம் நேற்று முன் னெடுக்கப்பட்டது.

இதில், கட்சியின் தலைவர் ரணில் விக் கிரமசிங்க உள்ளிட்ட கட்சியின் முக்கி யஸ்தர்களும் ஆதரவாளர்களும் அணி திரண்டு பங்கேற்றனர். (ம)

## நாட்டைக்...

போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித் தார்.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட் டுள்ள சந்தேகநபர்களை விடுவித்தல், குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப் படாத சந்தேகநபர்கள் தொடர்பில் எதிர் கால நடவடிக்கைகளை முன்னெடுத்தல், உண்மையைக் கண்டறியும் பொறி முறையை ஆரம்பித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மறுசீரமைத்தல், காணாமற்போனோர் தொடர்பான பிரச் சினைகளுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் செயற் பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற் படுவதன் மூலம், வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மக்களின் நோக்கங் களையும் நிறைவேற்றி, நாட்டை அபி விருத்தி நோக்கி நகர்த்த முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம)

## தமிழ் அரசியல்...

நீண்ட காலமாகப் பயங்கரவாதத் தடுப் புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட் டிருக்கும் அரசியல் கைதிகள் தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரியையும் சுமந் திரனையும் - ஒவ்வொரு கைதியின் விட யத்தையும் தனித்தனியாக ஆராய்ந்து, புதிய பரிந்துரையைக் கூட்டாகத் தமக்குச் சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கூறினார்.

அந்தப் பரிந்துரையின்படி தாம் நட வடிக்கை எடுப்பார் என்றார் ஜனாதிபதி. வழக்கு இருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது. ஏனையோரை விரைந்து உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப் படும் என்று கூறப்பட்டது.

அண்மையில் கைது செய்யப்பட்ட வர்கள்கூட - குற்றச்சாட்டப்படாதோரைத் தாங்கள் விடுவித்துக் கொண்டிருக்கின்ற னர் என்றார் நீதி அமைச்சர் சப்ரி. நாங்கள் தொடர்ந்து அதைச் செய்வோம்,

அடுத்த கூட்டத்துக்கு முன்னர் அந்தக் கைதிகளின் விடுதலையில் காத்திரமான முன்னேற்றம் இருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. (ம)

## அரசியல் தீர்வு...

ஜனாதிபதிக்கும் - கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

சுமார் மூன்று மணித்தியாலம் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில்,

இது தரப்பு கருத்துப் பகிர்வின் பின்னர், அரசியல் தீர்வு குறித்து முதலில் பேசப் பட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற் காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்துள்ளது. அது இப்போது மொழிபெயர்ப்புக்கு அனுப்பப் பட்டுள்ளது. அது வந்ததும் அதன் அடிப் படையில் அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்தலாம் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளி யிட்டார்.

அந்த மொழிபெயர்ப்புடன் அந்த யோசனை வெளிவருவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று சம்பந்தன் கேட்டார். இரண்டு மாதங்கள் என்று பதில் அளிக் கப்பட்டது.

அப்படியானால், அரசியல் தீர்வு விட யத்தை இரண்டு மாதம் கழித்துப் பேச லாம். அதற்கு முன்னர் மக்களின் உடன டிப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவோம். அவற்றுக்குத் தீர்வு கண்ட பின்னர் அதில் இருந்து அரசியல் தீர்வு பற்றிப் பேசலாம் என்று இரண்டு தரப்பினரும் இணக்கம் கண்ட னர்.

அரசியல் பிரச் சினைகள் பற்றிய பேச்சுகள் ஆரம் பமாக முன்னர் உடனடியாகத் தீர்க்கக்கூடிய பிரச் சினைகளை முன்வைத்தால் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப் பேன் என்று ஜனாதிபதியும் குறிப்பிட்டார். (ம)

## இரா...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கேள்வி எழுப்பி யுள்ளார்.

ஜனாதிபதி மற் றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந் திப்பு ஜனாதிபதி செயலகத்தில்நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு தொடர் பில் கூட்டமைப்பி னர் விலாவாரி யாக எடுத்து ரைத் தனர். இராணு வம் ஒரு பக்கமாக வும், தொல்லியல் திணைக்களம் ஒரு பக்கமாகவும், வனவள திணைக் களம் ஒரு பக்க மாகவும் காணி அப கரிப்பு செய் கின் றார்கள். வயல்நிலங் கள், வணக்கஸ்

தலங்கள், குடியிருப்புக்கள் எனப் பல இடங் களை மக்கள் நுழையத் தடை விதிப் பதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்த னர்.

'இராணுவத்தினர் காணி சுவீகரிக் கிறார்களா? அவர்களுக்கு எதற்குக் காணி?' என ஜனாதிபதி ஆச்சரியமாகக் கேள்வி எழுப்பினார்.

இராணுவத்தையோ, கடற்படையையோ, விமானப்படையையோ இனிக் காணி சுவீகரிப்பில் ஈடுபடக்கூடாது எனத் தாம் உத்தரவிடுவதாக கூறிய ஜனாதிபதி, அதை மீறி இனி எதுவும் நடக்காது என்றும் உறுதியளித்தார். (ம)

## 13ஐ அமுல்...

ஜனாதிபதி மாளிகையில் நடந்த கலந்து ரையாடலில் இதனை தெரிவித்தார்.

கலந்துரையாடலின் ஒரு கட்டத்தில், 13ஆவது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதி காரங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன, ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கங்களும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை, ஆகவே எமக் கும் அந்த சிக்கல் இருக்குமென அமைச் சர்கள் ஜி.எஸ்.பீரிஸ், அலி சப்ரி கருத்து தெரிவித்தனர்.

இதனால் கோபமடைந்த இரா.சம்பந் தன், மேசையில் ஓங்கி அறைந்து, "13ஆவது திருத்தத்தை கூட முழுமையாக அமுல் படுத்த முடியாவிட்டால், நாங்கள் ஏன் பேச வேண்டும். நாம் எமது வழியில் தனி வழி யில் செல்வோம்" என கோபமாக கூறினார். (ம)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1694 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 25.03.2022 | தினம் வெள்ளி
Y 11 13 34 39
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,512,464/-

சனிதா Shanida
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.25
சீட்டிழுப்பு இல: 3855
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,185,480/-
வெற்றி இலக்கங்கள் 08 10 26 51 Y
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 151
சீட்டிழுப்பு திகதி 2022.03.25
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 17 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,841,040/-

ரூசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,047,523/-
திகதி 25.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3406
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 01 09 35 42
6874833
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 17,167,103/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 02 12 21 31 43
சுப்பர் இலக்கம்
870
2022.03.25
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 225,734,683/-
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1520
சீட்டிழுப்பு திகதி: 2022.03.25
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,515,240/-
வெற்றி இலக்கங்கள் 14 25 48 58 Z
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1967இல் பிறந்த பிரான்ஸ் நாட்டுப் பிரஜாவுரிமையுள்ள திருமணமாகாத நற்பண்புள்ள குருகுல மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. நட்சத்திரம் – கேட்டை 4ம் பாதம் செவ்வாய்/கேது 12இல், லக்கினத்தில் சந்திரன், சனி 5இல் சூரியன், புதன், வியாழன், 9இல் மணமகன் இலங்கை வந்து மணமகளை அழைத்துச் செல்வார். தாரமிழந்தவர்களும் கருத்தில் கொள்ளப்படுவர். (10757)

தொடர்பு:- 070 253 0305 சகோதரன்

## குடும்பஸ்தரின் சடலம் கற்கோவளத்தில் மீட்பு



கற்கோவளம் புனித நகர்ப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே பகுதியை சேர்ந்த ஜீவேந்திரன் ஜீவன்ராஜ் (வயது- 27) என்பவராவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மேற்படி குடும்பஸ்தர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.(ம-60)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும் (C-4064)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS

0777-068-777

## விற்பனைக்கு

நீர்கொழும்பு நகரப் பகுதியில் மேன்ஷன் பிளேஸில் 10 பேர்ச் காணியில் வீடு விற்பனைக்கு உள்ளது.

ஆவே மரியா பள்ளி, ஆவே மரியா மருத்துவமனை மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைக்கு ஐந்து நிமிட நடை, டவுன் சென்டர் மற்றும் ரயில் நிலையத்திற்கு 10 நிமிட நடை மற்றும் பிரதான பேருந்து நிலையத்திற்கு 20 நிமிட நடை, உட்காரும் அறை, 4 படுக்கையறைகள், சமையலறை, ஒரு குளியலறை மற்றும் ஒரு வெளிப்புற குளியலறை மற்றும் ஒரு ஸ்டோர் அறை, வீட்டில் சிமென்ட் சிவப்பு தரை மற்றும் டைல்ஸ் வேயப்பட்ட குளியலறை

LKR 19.5 மில்லியன் (10780) ✆-077 837 3874

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கந்தர்மடம் சந்தி மணத்தறை வீதியில் அமைந்துள்ள 3 பரப்பு 4.55 குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. (9865)

077 229 4985
076 178 7326

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு வாகன ஓட்டுனரும் (Light Vehicle) விற்பனை பிரதிநிதியும் (A/L, முன்அனுபவம்) தேவை. (யாழ். நகரில் இருந்து 5 km இற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.) (10777)

077 267 4194
077 604 3681

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

- ❖ காசாளர்
- ❖ சமையலாளர்
- ❖ சமையல் உதவியாளர்
- ❖ பணியாளர்கள்

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசம் மற்றும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (ஆண், பெண் இருபாலார்) (10783)

தொடர்பு - 076 193 0545

## வேலையாட்கள் தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு கீழ்க் காணப்படும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை

**வயதெல்லை 30 வயதிற்கு மேற்பட்டவர்கள்(பெண்கள்)**

- அனுபவமுள்ள களஞ்சிய காப்பாளர் (STORE KEEPER)
- அனுபமுள்ள, பயிற்சி பெற்ற சிறுவர் பராமரிப்பாளர்கள்
- சமையலாளர்
- அலுவலக உதவியாளர் (குறைந்தது A/L வகுப்பில் 3 பாடம் சித்தி, Computer அனுபவம்)
- அனுபவமுள்ள பயிற்சிபெற்ற மருத்துவ உதவியாளர்
- உளவளத் துணையாளர் (உளவளத் துறையில் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்) - ஒரு வருட அனுபவம் உள்ளவர்.
- கணனி ஆசிரியர் (Computer Teacher)
- விளையாட்டு பயிற்சியாளர் (ஆசிரியர்)

**ஆண்**

- முச்சக்கர வண்டி ஓட்டுனர்

உடன் தொடர்புகொள்ளவும்!!!!!!!!!!! (10791)

தகுந்த சம்பளம் வழங்கப்படும். (நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

071 535 4500 | 071 535 4501 | பாரதி சிறுவர் இல்லம், முள்ளியவளை, முல்லைத்தீவு.

## காணி விற்பனைக்கு

யாழ். பழைய பூங்கா வீதி, இராஜசிங்கம் றோட்டில் அமைந்துள்ள நில. பர. 2 குளி 5 கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. (10775)

077 229 4985
074 046 1090

## வீடு வாடகைக்கு


அரியாலை மத்தி கண்டி வீதிக்கு சமீபமாக கேணியடி வீதியில் வசதிகள் அடங்கிய வீடு வாடகைக்கு உண்டு. (10781)

தொடர்பு

077 339 9072

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND
# Civil Engineering
WITH STRUCTURAL DESIGN
Leading to BEng (Hons)

23 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- ✓ நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineerig கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- ✓ பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineerig நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- ✓ அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson | University of East London

077 710 2131
077 068 8828

INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

23 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION (C-4052)

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk | BCAS Ranked "Platinum Partner" No.1 once again

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.